# செந்தமிழ்

தொகுதி 77 ஜூன் '83 பகுதி 2

மதுரைத் தமிழ்ச் சங்கம் * THE MADURA TAMIL SANGAM *

மதுரைத் தமிழ்ச் சங்கம் நடத்தும்

## தமிழ் இலக்கிய இதழ்

ஆசிரியர் : டி. பி. எம். பெரியசுவாமி

# செந்தமிழ்

தொகுதி-77 ஜூன் 83 பகுதி-2


## உள்ளுறை


| எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1. | ஆதி சங்கரரின் 'ஆத்ம போதம்' எஸ். சந்தானகோபாலன் | ... 55 |
| 2. | அறிவியல் வினா—விடை திரையன் | ... 60 |
| 3. | கலிப்பாட்டும் கட்டுப்பாடும் | ... 62 |
| 4. | குழந்தையின் அழுகை S. M. ஜெயத்திலகம் | ... 67 |
| 5. | ஆண் மக்கட் பெயர்கள்—ஓர் ஆய்வு அ. நடராசன் | ... 72 |
| 6. | புதுமைப் பொருளிலக்கணம் நெல்லை. நா. சொக்கலிங்கம் | ... 82 |
| 7. | தமிழ் நாட்டின் தொழில் வளம் பழனி. அரங்கசாமி | ... 92 |
| 8. | நூல் மதிப்புரை கோ. வன்மீகநாதன் | ... 98 |

# ஆதிசங்கரரின் 'ஆத்ம போதம்'

—எஸ் சந்தான கோபாலன்
பதிவாளர் இந்திய தொழில் நுட்பக் கழகம் சென்னை.

ஆத்மா என்றாலே சிலருக்குத் தலைவலிக்கும். அது வரட்டு வேதாந்தம் என்பது அவர்கள் சொல்லும் காரணம். இருப்பினும் ஆத்மா என்றால் என்ன? அதற்கும் நமக்கும் என்ன தொடர்பு என்பதை ஒவ்வொரு மனிதனும் ஓரளவுக்குத் தெரிந்து கொள்ள வேண்டும். ஏனென்றால் உயிரற்றதாகவும் இல்லாமல், விலங்காகவும் இல்லாமல், மனிதப் பிறவி எடுத்தமையால் இந்த அறிவு தேவை.

மனிதன் ஒரு விசித்திரமான பிறவி. மனிதப் பிறவி மற்றப் பிறப்புக்களை விட உயரியது. ஏனென்றால் அது அறிவோடு தொடர்புடையது வினைப் பயனால் அது சில சமயங்களில் சரியாக இயங்குவதில்லை. ஆனாலும் அதை வழிப்படுத்தலாம். அதற்கு முக்கிய கருவி உள்ளம் அல்லது மனம். அது ஒருதன்மை உடையதன்று. ஆயினும் அதனை ஒழுங்குபடுத்திக் கொள்ளலாம். ஆணவமும் அகம்பாவமும் மனதில் தோன்றுகின்றன. அவை நல்லதல்ல. நல்வாழ்வு வாழ, அறியாமையிலிருந்து விடுபட ஒவ்வொரு மனிதனும், மனம், உயிர், உடல் முதலியவைகளின் உணர்வுகளைப் புரிந்து கொண்டு, நம்முள்ளத்திலும், வெளி உலகிலும் பரவியுள்ள இறைவனை அறிந்து உண்மையான ஆத்மாவை உணர வேண்டும்.

இதற்குப் பல படிகளைத் தாண்ட வேண்டும். எப்படிப் பல்கலைக் கழகத்தில் உயர்படிப்போ அல்லது ஆராய்ச்சியோ செய்ய எண்ணுவோர் படிப்படியாக முதலில் இளங்கலைப் பட்டம் பெற்று, பிறகு முதுகலைப் பட்டம் பெற்று, ஆராய்ச்சி செய்து ஓர் உண்மையைக் கண்டுபிடித்து டாக்டர் பட்டம் பெறுகிறார்களோ, அதேபோல் உண்மையை நாடுபவன், பல படிகளைத் தாண்டி முதலில் தான் யார் என்று உணர்ந்து, அதனை இயக்கும் சக்தி யாது என்பதையும் புரிந்துகொண்டு, இந்த உடலுக்கும், ஆத்மாவிற்கும் என்ன தொடர்பு? எப்படி இந்த ஆத்மா இந்த உடலில் வந்தது? ஆத்மாவிற்கும் பரமாத்மாவிற்கும் என்ன உறவு? எப்படி நாம் ஆத்ம சிந்தனை செய்து, பரம்பொருளை அடைவது? என்பவைகளை அறிந்து கொள்ளும் மார்க்கத்தை "ஆத்ம போதம்" கற்பிக்கும்.

ஆத்ம போதம் என்றதுமே நம் போன்றவர்களுக்குத் தோன்றும் எண்ணம் இது ஏதோ மருந்து என்று. ஆம் அது ஒரு மருந்துதான். இப்பிறவிப் பிணியை நீக்கிப் பரம்பொருளை அடைய ஒவ்வொருவரும் ஆத்ம சிந்தனையை எப்படி வளர்த்து சித்தி அடையமுடியும் என-பதற்கு வழிகாட்டியாக இந்த ''ஆத்ம போதம்'' அமைந்திருக்கிறது.

ஒவ்வொரு மதத்திற்கும் அடிப்படையான ஆதார நூல்கள் இருக்கின்றன. கிறித்துவ மதம் என்றால் பைபிள்; இசுலாமிய மார்க்கத்திற்குக் கொரான்; பௌத்த மதத்திற்குத் ''தம்மபதம்'' என்கிறோம். இவ்வாறு வெவ்வேறு மதங்களுக்கு ஆதாரமான சில நூல்கள் இருக்கின்றன. ஆனால் இந்து மதத்திற்கோ அநேக நூல்கள் இருக்கின்றன வேதங்கள், சாத்திரங்கள், உபநிடதங்கள். இவை தவிர விரிவான உரைநூல்கள் இருக்கின்றன. வேதத்திலும், உபநிடதங்களிலும், சாத்திரங்களிலும் சொல்லப்பட்ட கருத்துக்-களை விளக்கமாகப் புரிந்து கொள்ளும் வகையில் பல விளக்க நூல்கள் இருக்கின்றன. இவைகளைப் போன்றதுதான் ''ஆத்ம போதம்'' என்ற நூல். இது ஆதிசங்கரபகவத்பாதரால் இயற்றப்பட்டது. இந்த நூலின் த்யானஸ்லோகம் நமக்கு ஒருவாறு விளக்கம் தருகிறது:

'' ப்ராதஸ்ராமி ஹ்ருதி ஸ்ம்ஸ்புரதாத்மதத்வம்
ஸச்சித் ஸுகம்பரமஹம்ஸ கதிம்துரீயம்
யத்ஸ்வப்ன ஜாகரஸுஷுப்த மவேத்நித்யம்
தத் பிரஹ்ம நிஷகல மஹம் நசபூத ஸ்ங்க ''

அதாவது நமது இதயத்தில் தெளிவாக விளங்கிக் கொண்-டிருக்கும் ஆத்மா கனவு, விழிப்பு, ஆழ்ந்த தூக்கம் என்கிற நிலைக்கு அப்பாற்பட்டது எனவும், அதுதான் பரம்பொருள் எனவும், இது இந்த பஞ்சபூதங்களின் தொடர்பிலிருந்து விடுபட்டது எனவும் உணர்ந்து அஞ்ஞானத்திலிருந்து விலகித் தபசு, தர்மம், பூஜனம், பஜனை முதலிய சாதனங்களைக் கைக்கொண்டு படிப்படியாக உயர்ந்து ஆத்ம ஞானம் பெறவேண்டும் என்பதாம். இந்த நூல் யாவருக்கும் பயன்படும்.

மனத்தைக் கெட்ட பாதையில் செல்லாது தடுத்து அதனால் அமைதி அடைந்து பற்றற்ற வாழ்க்கையைப் பின்பற்றி மோட்சமும்

அடையலாம். இந்த உலகில் சிறந்த மனிதனாகவும் விளங்கலாம் என்பதனை ஆத்ம போதம் தெளிவாகக் கூறுகிறது.

நம் உள்ளே அழியாமல் இருக்கும் பொருள் ஆத்மா. அதைத் தாங்கி நிற்கும் இந்த உடல், மனம், புத்தி முதலியவைகள் அழியக்கூடியன. தவிர இந்த ஆத்மா எங்கும் பரவி, அந்த இடத்திற்குத் தக்கவாறு வெளிப்பரிணாமத்தை எடுத்துக் கொள்கிறது. எப்படித் தண்ணீர் அதனை வைத்திருக்கும் பாண்டங்களின் வடிவை எடுத்துக் கொள்கிறதோ அதுபோல் ஆத்மாவும் இந்தப் பூத உடலுக்குத் தகுந்தவாறு வெளிப்படுகிறது. இந்த நூலில் ஆதிசங்கரர் பலப்பல உபமானங்களை விளக்கி, உலகங்கள் நீர்க் குமிழி போல் மூலப் பொருளாகிய பரப்பிரும்மத்திலேயே எழுந்து நின்று பிறகு மறைகின்றன என்ற உண்மையை விளக்கியிருக்கிறார்கள்.

சங்கரருடைய அத்வைத வேதாந்தத்திற்கு இந்த நூல் ஆணிவேராக விளங்குகிறது. பிரம்மம் ''சர்வாதிஷ்டான அத்வயப்'' பொருள் என்பதை அடிப்படையாகக் கொண்டது இந்நூல். இந்த நூல் யாராலும் படிக்கத் தகுந்தது. அதாவது யார் யார் புலன்களை அடக்கி மனத்தின் கெட்ட போக்கைத் தடுத்து அதனால் அமைதியும், பற்றற்ற தன்மையும், மோட்சத்தையும் அடைய விரும்புகிறார்களோ அவர்களுக்கு இந்த நூல் எழுதப்படுகிறது என்று தெரிவிக்கிறார்.

ஞானம் இன்றியமையாத ஒன்று. அஞ்ஞானத்தால் ஆத்மா பலப்பலவாகத் தோன்றுகிறது. உதாரணமாக சூரியன் எப்பொழுதும் ஒளிர்கிறது ஆனால் மேகம் மறைத்தால் புலனுக்குத் தெரியவில்லை. அதனால் சூரியனே இல்லை என்று சொல்லிவிடலாகுமா? மேகம் மறைந்தவுடன் சூரியன் ஒளி வீசும். அதேபோல் ஆத்மா எப்பொழுதும் ஒளிவீசிக் கொண்டுதான் இருக்கிறது. அஞ்ஞானத்தின் காரணமாக இந்தப் பிரகிருதி சம்பந்தத்தால் மறைந்து காணப்படுகிறது. இந்த அஞ்ஞானத்தைச் சில பயிற்சிகளாலே நீக்கலாம்.

பழைய வினைகளின் காரணத்தினால் இந்த உயிர் இயங்குகிறது. இந்த உயிர் ஆனந்த நிலையை அடைய இந்த உலகில் நல்ல அனுபவம் பெற்றுத் துன்பம் - இன்பம் இவைகளை வினைகளுக்குத் தக்கபடி துய்த்துப் பிறகு அறிவின் உதவியால் பருவுடல், நுண்ணுடல்களை அறிந்து, ஆத்மானுபவம் அடைய வேண்டும்.

விவேகத்தினால் உடல், மனம், புத்தி முதலியவைகளை நீக்கி, பிறகு அதன்மேல் படிந்திருக்கிற அழுக்கையும் விலக்கி, பிறகு ஆத்மா சுத்த உயர்வு அடைந்து, பரமானந்த நிலையை அடைய முடியும். ஆகையினாலே புத்தியைத் தெளிவுள்ளதாகப் பழக்கிக் கொண்டால் அதிலே பரமாத்மாவின் ஒளியைக் காண முடியும். அது எளியதன்று. நல்ல எண்ணங்களை எண்ணி நல்ல செய்கைகளைச் செய்து அதன் மூலம் புத்தி சுத்தமாகி. பிறகு பரமனின் உருவைத் தியானத்தின் மூலம் அடையலாம்.

பிறகு ஆத்மாவின் குணங்கள் இந்நூலில் விவரிக்கப்படு-கின்றன. அது எப்படிச் சாட்சி பூதமாக இருந்து கொண்டு, உடல், இந்திரியங்கள், மனம், புத்தி இவைகளை இயங்க வைக்கிறது என்பதையும், எப்படி ஆத்மா அழியாத அமர நிலையில் இருக்கிறது என்பதையும், விளக்கமாகச் சொல்லுகிறது.

பிறகு வேதங்களில் சொல்லப்பட்ட நான்கு மகா வாக்கியங்-களை எடுத்துச் சொல்கிறது. அவையாவன:

(1) ப்ராஞ்ஞானம், பிரஹ்ம

(2) தத்துவம் அஸி

(3) அயம் ஆத்மா பிரம்ஹ்ம

(4) அஹம் பிரஹ்மாஸ்மி என்பனவாம்.

இவ்வாக்கியங்களின் மூலம் ''ஜீவாத்மா'' என்பது உடலன்று; மனமன்று புத்தியுமன்று; காரணசரீரமுமன்று என்றும், இவற்றை மீறியது என்றும், நம்முள் இயங்கும் அந்த ஆத்மாதான் எல்லா உயிர்களுக்குள்ளும் இயங்குகிறது என்றும், அதுவே பரமாத்மா என்றும் விளக்கப்படுகின்றன.

பிறகு அந்த பிரும்மத்தின் அடையாளங்களும் கூறப்படு-கின்றன:-

'' நிர்குணோ நிஷ்க்ரியோநித்யோ
நிர்விகல்போ நிரஜ்ஜன :
நிர்விகாரோ நிராகாரோ
நிர்யமுக்தோஸ்மி நிர்மல : ''

ஆத்மாவானது குணமற்றது, செயலற்றது, எண்ணமில்லாதது. களங்கமற்றது, மாற்றம் அடையாதது என்பது இதன் பொருள்.

ஆதிசங்கரர் இந்நூலில் மேலே தியான முறையைக் கூறிப் பிறகு ஞான பெற்று ஆத்ம சாக்ஷாத்காரம் அடையலாம் என்றும் செப்புகிறார்.

பிரும்மத்தை உள்ளுணர்வால்தான் உணரமுடியும். அதைப் பற்றிப் பேசி வருதல் எல்லாம், வெறும் பேச்சுத்தான். உண்மையில் அதைப்பற்றிப் பேசுவதும் கடினம். அது புலன்களால் உணரும் பொருள் அன்று. அதனை அனுபவத்தினால் தான் அறியமுடியும் என விளக்குகிறார்.

கல்கண்டு தித்திக்கும். அதனை அனுபவித்து உணர்ந்தால் தான் முடியும். சர்க்கரை என்று தாளில் எழுதி அதைச் சுவைத்தால் இனிக்குமா? பாலுக்குள் வெண்ணெய் இருக்கிறது — அது நமக்குத் தெரியும். ஆனால் அது இந்தக் கண்ணுக்குப் புலப்படவில்லையே: அதனால் வெண்ணெய் இல்லை என்று சொல்லிவிட முடியுமா? பாலுக்கு எண்ணைப் பசை இருக்கிறது. ஆகவே அந்தப் பாலுக்குப் பரவலாய் எங்கும் பரவி நிற்கும் அந்த வெண்ணெயை அடைய, அதாவது ப்ரஹ்மஞானத்தை அடையப் பாடுபட வேண்டியிருக்கிறது. அதற்குச் சில வழிகள் உள்ளன.

பாலைப் பதமாகக் காய்ச்சிச் சற்று ஆற வைத்துக் கொஞ்சம் மோரிட்டு அது உறைந்த பிறகு மத்தினால் கடைந்து, அப்பொழுது குளிர்ந்த நீரைவிட்டு சிதறும் வெண்ணெய்த் திரட்டி எடுக்க வேண்டும். அதிகம் கடைந்தால் வெண்ணெயை சிதறிவிடும். அதுபோல நம்முள் பரவி இருக்கும் பிரும்மத்தை, புலன்களை அடக்கி, குருவினுடைய உபதேசம் பெற்றுச் சிரவனம், மனனம், தியானம், முதலிய செய்கை-களைச் செய்து உபநிடதங்கள், சாத்திரங்கள் முதலியவைகளைப் பயின்று, அவற்றைப் பற்றி ஆராய்ந்து தெளிந்தால் பாலில் வெண்ணெயைப் பார்த்து விடுவது போல் பிரும்மத்தை அறியலாம்.

இதைத்தான் ஆத்ம போதம் தெளிவாகக் கூறுகிறது.

இப்படிப்பட்ட நூல்களை மீண்டும் மீண்டும் படித்துக் கேட்டு மனத்தில் நிறுத்தி, பயன்பெற வேண்டும்.

# அறிவியல்

## வினா - விடை

— திரையன்.

### 1. வானவில் எப்படித் தோன்றுகிறது?

செங்கருநீலம், கருநீலம், நீலம். பச்சை, மஞ்சள், ஆரஞ்சு, சிவப்பு ஆகிய ஏழு நிறங்களைத் தன்னுள் அடக்கியது, சூரிய ஒளி. இந்த ஏழு வண்ணங்களில் எதுவும் தனித்தனியாக நமது கண்ணுக்குத் தெரிவதில்லை. இலேசான மஞ்சள் அல்லது வெள்ளையாகத்தான் சூரிய வெளிச்சம் நமக்குத் தோன்றுகிறது. ஒரு முப்பட்டையான கண்ணாடி வழியே சூரிய ஒளியினைச் செலுத்தும்போது அந்த ஒளி ஏழு வண்ணங்களாகப் பிரிவதைப் பார்க்க முடியும். ஆயின் வானவில் எப்படித் தோன்றுகிறது? மழை பெரிய துளிகளாக விழும்போது சூரியஒளியும் இருக்க வேண்டும். மழைத்துளிகளினூடே புகும் சூரிய ஒளி ஏழு வண்ணங்களாகப் பிரிந்து வானட்டில் வில்போலப் படிந்திருக்கும். அது பல்வேறு வண்ணங்களுடன் பார்ப்பதற்கு அழகாக இருக்கும். இதனையே வானவில் என்கிறோம். வெள்ளிய அருவி கொட்டும்போது அதன்மீது சூரிய ஒளி படிந்தாலும் இந்த ஏழு நிறங்களும் தோன்றுவதை நாம் பார்க்கலாம்.

### 2. கடல் நீர் ஏன் உப்பாக இருக்கிறது?

தண்ணீர் இரண்டு வகையில் கிடைக்கின்றது. மழைநீர் மண்ணில் விழுந்து ஆறாக ஓடிக் கடலில் கலக்கிறது. குளமாகத் தேங்குகிறது. ஊற்றுநீர், கிணற்றிலிருந்து கிடைக்கிறது. மண்ணிலிருந்தும், பாறைகளிலிருந்தும் தாதுஉப்பு எல்லா வகையான நீரிலும் சிறிதளவாவது கரைந்திருக்கும். ஆயிரக்கணக்கான வருடங்களாக உலக முழுவதும் இருக்கின்ற ஆறுகள் கடைசியில் கடலில் போய்ச் சேருகின்றன. நீர் சூரிய வெப்பத்தினால் ஆவியாகும். உப்புச் சத்து கடலில் தங்கி விடுகிறது. ஆவியாகும் நீர் மழையாகப் பொழிவதும், மழைநீர் பூமியின் உப்புச்சத்தை மீண்டும் கடலில் சேர்ப்பதும் தொடர்ந்து நடைபெறுகின்றது. ஆயினும் கடல்நீரில் இருக்கும் உப்பு மட்டும் தொடர்ந்து அதிகரித்துக் கொண்டேயிருப்பதால் உலகம் முழுவதும் சமுத்திரங்களும் கடல்களும் உப்பு நீராகவே இருக்கின்றன. இவற்றையன்றி இஸ்ரேல் நாட்டில் இருக்கும் (Dead sea, Salt Lake) போன்று இடங்களில் நீருக்கடியில் உப்புப் படிவம் பாறைகளாகவே இருப்பதால் மற்ற இடங்களை விட இங்கிருக்கும் கடல் நீரில் மிகவும் அதிக உப்பாக உள்ளது. இரண்டு இடங்களில்

உள்ள உப்பு நீரில் நஞ்சுப் பொருளான கால்ஷியம் குளோரைடு அதிகமாகக் கலந்திருப்பதால் எந்த உயிர்ப் பொருளும் அங்கு வாழ முடிவதில்லை. மனிதர்கள் மீது பட்டால், உடம்பில் தாங்க முடியாத அரிப்பும், எரிச்சலும் ஏற்படுவதாகக் கூறுகிறார்கள்.

### 3. இடியும் மின்னலும் எவ்வாறு ஏற்படுகின்றன?

மழை காலத்தில் கரிய மேகங்கள் ஒன்றோடொன்று மோதிக் கொள்ளும்போது முதலில் இடியும் மின்னலும்ஒலிக்கும். பின்னரே இடி இடிப்பதாகத் தோன்றும். உண்மை இதுவல்ல. இடியும் மின்னலும் ஒரே நேரத்தில்தான் ஏற்படுகின்றன. ஆயினும் ஒலியை விட ஒளி விரைவில் பூமியை அடைந்து விடுவதால், இடிஇடிப்பதற்கு முன்னால் மின்னல் ஏற்படுவது போல் தோன்றுகிறது. ஒரு வினாடிக்கு ஒரு லட்சத்தி எண்பத்தி ஆறாயிரம் மைல் வேகத்தில் ஒளி பயணம் செய்வதாகக் கணக்கிட்டிருக்கிறார்கள். மின்னல் ஒரு வகையான மின்சக்தியேயாகும். மேகங்கள் இரண்டு உராயும்போது மேகங்களுக்கிடையிலோ, அல்லது மேகத்திலிருந்து பூமிக்கோ அது கண்சிமிட்டும் நேரத்திற்குள் தாவி விடுகிறது. பூமியைநோக்கி அது கீழிறங்கும் போதுதான் சிற்சில சமயங்களில் உயரமான மரம் கட்டிடம் ஆகியவற்றின் மீது விழுந்து சேதப்படுத்தி விடுகிறது. எனவே தான் இடியும் மின்னலும் தோன்றும்போதும் மழை பெய்யும் போதும் மரத்தின் அடியில் ஒதுங்கி நிற்றல் கூடாது.

### 4. இருட்டில் செடிகொடிகள் வளருமா?

சூரிய வெளிச்சம் இல்லையாயின் செடிகொடிகள் வளரா. இலைகளில் பச்சையம் எனப்படும் குளோரோபில் இயற்கையாகவே உண்டு. பசியசெடிகள் தங்களுக்கு வேண்டிய செலுலோஸ், ஸ்டார்ச் போன்றவை தயாரிப்பதற்கு இக் குளோரோபில் தேவை சூரிய வெளிச்சம் இல்லையாயின், செடி, கொடிகளுக்கு வேண்டிய உயிர்ச்சத்துச்களைக் குளோரோபில் தயாக்க இயலாது. ஒளிச் சேர்க்கை பசிய தாவரங்களில் நடைபெறாது போனால் அவை வெளுத்து, வெதும்பி, சாம்பி மடிந்து விடும். இருட்டறையில் மின் விவக்குகளைப் போட்டாலும் ஒளிச்சேர்க்கை நடைபெறாது. செடிகளும் வளரா, சூரிய ஒளி இல்லாமலே வளரும் தாவரங்களும் உண்டு. அவையே காளான், நாய்க்குடை போன்றவை. இவற்றில் பச்சையம் இல்லை. எனவே இவை இருட்டிலேயும் வளரும்.

# கலிப்பாட்டும் கூட்டுப்பாடும்

கவிதையின் தோற்றம் ஒரு புரியாத புதிர். முறையாகக் கல்வி பயின்று, சீர், அசை, தளை, அடி, தொடை, பா, பாவினம் ஆகியவற்றின் வேறுபாடுகளை உணர்ந்து, எதுகை மோனைகளுக்கு இடம் கொடுத்து, மரபுவழிக் கவிதை எழுதுவது அருகி வருகிறது. மிக்க பொறுமை-யும், ஆழ்ந்த படிப்பும், நுணுக்கமான பயிற்சியும் கைக்கொண்டோரே இதில் வெற்றி பெறமுடியும். இம்-முயற்சியில் தோற்றுப் போனவர்கள்தான், "காரிகை கற்றுக் கவிபாடுவதினும் பேரிகை கொட்டிப் பிழைப்பது மேல்" என்று கூறியவர்கள். மரபுக் கவிதையின் எந்தவித நியதிக்கும் கட்டுப்படாமல், மனம் போன போக்கில் சொற்களை அடுக்கிப் புதிய கவிதை உலகத்தைப் படைத்து விட்டோம் என்று எண்ணுகிற புதுக்கவிதைக் காரர்கள் வளர்ந்து வருகிறார்கள் தொனிப் பொருளும், குறிப்புப் பொருளும் இல்லையாயின் இந்த 'வசனங்கள்' வெறும் சொல் வீச்சுத்தான். இவை காலத்தை வென்று நிற்குமா என்பதைக் காலம் தான் சொல்ல வேண்டும். பிரான்சு நாட்டிலிருந்து ஆங்கில நாட்டுக்கு இறக்குமதியான இந்தச் சரக்கு இலக்கியக் கடை வீதியில் நெடுங்காலம் எடுபடவில்லை. எது கவிதை என்பது ஒருபுறமிருக்கட்டும்.

தனியொரு மனிதன் எப்படிக் கவிதை எழுது-கிறான்? உள்ளக் குமுறலே கவிதை என்கிறான், வேர்ட்ஸ் வொர்த். அவனுடைய உறவுக்காரனான காலரிட்ஜ் எனும் கவிஞன், தான் கவிதை எழுதுவதற்குப் போதைப் பொருளை (opium) நாடியதாக வரலாறு கூறுகிறது. நமது நாட்டிலும் கோப்பையிலே குடியிருந்து கவி பாடிய கவிஞர்கள் உண்டு. நினைத்தவுடன் பாடிய ஆசுகவிகளும் உண்டு. கல்லை அடுக்கிக் கொத்தன் வீடு கட்டுவது போலச் சொல்லை அடுக்கி இதுவே கவிதை என்பாரும் உள்ளனர். செய்தித்தாள்களையும், வார, மாத இதழ்களையும் மேற்போக்காகப் படித்துப் பழகிப்போன மக்கட் கூட்டம் ஆழ்ந்து சிந்தித்துப் படிக்க முன் வருவதில்லை. இந்தக் கூட்டத்துக்கு இரை போடத்தான் புதுக்கவிதைகள் இருக்கின்றன. கற்று-

ணர்ந்து, சிந்தித்துச் செயல்படுகின்றோரின் எண்ணிக்கை அருகிக் கொண்டு வருகின்றது. சிறப்பாக அவர்களுக்கு என்றே இவ்விதழில் வெளியாகின்ற இக்கலிப்பாட்டு, ஒரு எந்திரத் தொழிலாளியால் எழுதப்பட்டது.

திருச்சி பெல்நிறுவனத்தின்பொருட்கிடங்கு மேலாளராகப் பணிபுரியும் நண்பர் காசிராஜன் அவர்களைக் காணச் சென்றபோது இந்த அரிய கவிஞரைக் காண நேர்ந்தது. மணப்பாரைக்கு அருகில் ஒரு சிறு கிராமத்தில், நகைத் தொழிலாளியின் குடும்பத்தில் பிறந்த சுப்புராயன் எட்டாம் வகுப்புக்கு மேல் பயிலவில்லை. ஏராளமான இலக்கிய நூல்களையும் படித்தது இல்லை. இருப்பினும் ஆழ்ந்த புலமை பெற்றோருக்கும் சட்டென்று புரியாத முறையில் சங்கச் சான்றோர்கள் எழுதியது போன்றே எப்படி ஒரு கலிப்பாடலை அவரால் எழுத முடிகிறது என்பது ஒரு புதிராக இருகிறது 'இதனால்யாருக்குப் பயன்' என்று கேட்கும் பொருள்முதல் வாதிகளுக்கு இப்பாடல் தேவையில்லை. நலிந்து கிடக்கின்ற திறமையினை வெளிப் படுத்தவும், ஆழ்ந்து பயில்வோரின் சிந்தனைக்கு ஒரு விருந் வும்தாக அமையட்டுமே என்ற எண்ணத்தில் குடும்பக்-கட்டுப்பாடு பற்றிய இக்கலிப்பாட்டு ஈண்டு வெளியா-கிறது. — ஆசிரியர்

## இன்னா கைம்மை ; இரண்டே பெருமை

(வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பா)

### தரவு :

அன்பரிய நனிபசலை அகழ்ந்தூற உடம்புயிருட்
செம்புணரத் துவன்றந்நாள் சிறுமுத்துச் செருக்கேந்தி
அடர்விட்டுக் குறும்பையின் அகலான்றன் மகவரும்பக்
குடர்கண்டும் பொறிநீவிக் குணந்தானும் மருந்தூத
நாற்காலும் இருகாலாய் நறுவிடலை நின்மக்காள்
பாற்காலிற் பணிதாயாய், 'பழிகைம்மை' ஓதற்கேள் :

### தாழிசை :

மூழ்குநீர் கலனெய்தி முதிர்பொருதின் இறும்பனைய
வீழ்குநாள் அறியா விதிகொழுநன் துணையினாள்
மதிபுலம் மனமொல்க மடவுணர்ந்தோர் உயிர்கொய்யும்
புதைபுலம் பிரிவென்றாற் கடலாமோ? நிலனாமோ?

நூழியிற் பொதுமகள் நுழைந்தெய்தப் பிறிதின்றி
ஆழியது நுழுவும் அடல்விதி பறையாது
செருவினாற் பிணிபொருள் செயிர்த்தலி னகல்மனை
பொருதியான் விறலியின் பருகுயிர் பதரதோ?

வரைவிய மலிதலால் வடிவொழுகப் பொற்பெழிலி
அருவியது திரேளனும் அதுஞான்று கொழுநனாற்
சுமந்தறியும் வயிறின்றிச் சுவையறியும் பொழுதின்றி
தமியையாய் ஒழுகலின் விதியினோ? வினையினோ?

### முடுகியல் :

நீர்மலி விழிபுழை மலரினள் கலினினி
    நெறியென சுடுவது மடம்
மார்பெழி லுறையரு மதுகொழு நனைதுறந்
    தேதற மடிவன துறை
கார்குழ லுரவுத நறவென கெழுமியன்
    கனிமொழி தகரிய சடை
சீர்மலி குனகிய னுகுசெவி தொடருரை
    சிறைபடும் பதிவென வுளம்.

### அம்போதரங்கம் :

தொடுதரல் வரகேனும் சுளகினிற் கைம்மையென
இடுமொழி எயிலொயிலர்க் கேலாமற குறுபவளாம்!
வரலெதிர் வெண்கலைய பிரிவின அணிதானும்
மறுமுகல் விழிதயை வாகாவாம் கைம்மைநலம்!

வசையினோ வறுமையெனில் வழிநுடங்கப் புறதொடரும்!
த்சையினோ மசிஅவிழும் தருக்கருரை தாள்பணியும்;
நகில்நகார் நருளின்றேல் நலிதுகிலப் புரைவெளிரும்;
உகல்உயிர் உடலின்றேல் ஒகதமி ஒல்லுதற்கோ?

வண்டினத்தால் துறந்தனள் பூ
வரிகுழலோ மறந்தன நெய்
கவிவிரலாள் எயலற கண்
கனிநறவோ செதிளு மிதழ்
பொறை உரோ அருக முலை
ஒறுபுகாம் நெகலு குறி
பறதியாள் வெருவின கால்
பசலியா தறுகின மெய்.

பொற்பெள்ளா விளவொருபால்
புரைகொள்ளும் உலகொருபால்
கற்பென்ற நிலையொருபால்
கனிவெண்ணுங் கெழுவொருபால்
பசிகலவும் வயிறொருபால்
பழிகலவும் நினைவொருபால்
தெருளினிலும் மருளொருபால்
திதலையென் றலர்ஒருபால்
அயர்வகலா இரவொருபால்
அகத்தவனின் உருவொருபால்
பீளறயா வயிறொருபால்
பிடியறியா அமுதொருபால்
வதுவையாய்க் கனவொருபால்
வருந்துளின் தடையொருபால்
பரவையுள் மனமொருபால்
பழகினாள் நிலனொருபால்.

அதனால், (தனிச்சொல்)

சுரிதகம் :

தீதாம் இன்றேல் கடிமணம் நோவ
தீதாம் கைம்மை பிரிவினும் நோவ
தீதாம் இன்றேற் பேறாம் அதுமிகத்
தீதாம் புகலாய் பிறங்கடை செல்வுழி
ஈரேழ் காம்பின கேழல்
பாராய் இரண்டின் பருப்பொருள் மகவே.

— இஃது, மக்கட் செல்வமென கலம்மிகுத் தீன்றாள்முன் தவிரவர் போக்கிலாளின் பேதைமை காட்டி குமுகப்பொறியிற் கைம்மைபடு எள்ளற்கேளென இடையொரு காதை விரிப்ப கேழல் (பன்றி) மிக்கீனப் பொருணிலை மீகும். ஆதாய் விளையத் தன்னிலை தாழுமென்றாறவாறும் 'நின்னிலை ஈதாயினும் அஃது நின் பிறங்கடைக்குந் தொற்றாது, சாறுமே இரு மக்களெனப் புகலாதொழியின் தீதெ தாம்போலென நின்மக்கள்பாற் கண்ணுறுவை என்றவாறாய் மூதாய் ஒருத்தி ஓத ... ...

ஏதிலிக்கைம்மையினும் மிகுமக பெற்றினுந் தாழ ஆ நல்குரவே நையநீள் விஞ்சி நிற்குமெனும் உட்கருவாற் றலைப்பட் டுணர்த்தமற் றென்றது.

துவாக்குடி மலை,<br>5—2—2013.

'புலவரடிப்பொடி'

— வளர்மதி சுப்புராயன்

# குழந்தையின் அழுகை

## (CRYING CHILD)

— Dr. S.M. ஜெயத்திலகம் M.B.B S., D.C.H.
குழந்தை மருத்துவர் — ஈரோடு

(மனிதன்) பிறக்கும் போதும் அழுகின்றான்...என்ற தொடங்கும் பாடலை நாம் நன்கு அறிவோம். இப்பாடலின் கருத்து உண்மை தான். குழந்தை பலத்த ஒலியுடன் அழவேண்டும். அது ஒரு நல்ல அறிகுறி. தாயின் வயிற்றில் இருக்கும்போது குழந்தையின் நுரையீரல் சுருங்கி அது பணிபுரிவதில்லை. குழந்தை பிறந்து நஞ்சுக் கொடியை வெட்டியவுடன், அதாவது தாயும் சேயும் வேறாக ஆன பின்னர், குழந்தை பலமாகக் கத்துகின்றது நுரையீரல் நன்கு விரிந்து மூச்சு மண்டலம் தன் பணியைச் செவ்வனே செயல்பட ஆரம்பிக்கின்றது என்பதே அதன் பொருள். உயிர்வளி (ஆக்ஸிஜன்-Oxygen) மூளைக்குச் சென்று மூளையில் அமைந்துள்ள பணிகளின் மையத்திற்குச் (Centres representing motor movements, sensory movements, respiratory and circulatory centres) சென்று அவைகளின் செயல்களைச் செம்மைப்படுத்துகின்றது. குழந்தை பிறந்தவுடன் அழுவதில் தாமதமானாலோ அல்லது மெல்லிய ஈனக்குரலில் அழுதாலோ, குழந்தையின் மன வளர்ச்சியும் உடல் வளர்ச்சியும் பின்னர் மிகவும் பாதிக்கப்படும் என்று ஊகிக்கலாம். அத்தோடு அது வளருகின்ற காலத்தில் தவழாது; உட்காராது; நடக்காது. பேச்சும் தாமதமாகவே வரும். எனவேதான் குழந்தை பிறந்த உடன் அழுவதற்கு மருத்துவர்களும் அவர்களின் உதவியாளர்களும் உள்ளங்கால்களைக் கிள்ளியோ அல்லது முகத்திலும் உடம்பிலும் தண்ணீர் அடித்தோ, பல முறைகளைக் கையாளுகின்றனர். எப்படியாயினும் குழந்தையை அழச் செய்துவிட வேண்டும் என்பதே அவர்கள் நோக்கம்.

பொதுவாக 50 விழுக்காடுஅன்னையர், தங்கள் குழந்தைகளின் அழுகையை, குழந்தை பிறந்து ஏறத்தாழ 24 மணி நேரங் கழித்துப் புரிந்து கொள்கின்றனர். தாய்மார்களை ஒரு அறையின்கண் இருக்கச் செய்து அடுத்த அறையில் உள்ள அவர்களின் குழந்தைகளுள் ஏதேனும் ஒன்றினை அழவிட்டால் அந்தக் குழந்தையின் அழு

குரலை அதன் தாய் அறிந்து கொள்ள முடியும். இரண்டு தினங்களுக்குள் எல்லாத் தாய்மார்களும் தங்கள் குழந்தையின் அழுகையினை நன்கு அறிந்து கொள்கின்றனர். எந்தப் பயிற்சியுமின்றி குரலின் வேறுபாடுகளை அறிந்து கொள்ளும் தாய்மையின் சிறப்பை என்னென்பது!

சிற்சில குழந்தைகள் பிறந்தது முதல் மகிழ்ச்சியுடன் காணப்படுகின்றனர். சில குழந்தைகளோ தாங்கள் விரும்பாத, சிறு செயல்களைக் கூட ஒப்ப மனமின்றி அழுகின்றன.

''குழந்தை நலப் பேராசிரியர் இல்லிங்க் வொர்த்'' குழந்தையின் பலவிதமான அழுகைக்குக் காரணத்தை ஆராய்ந்து கட்டுரை ஒன்றினை எழுதியுள்ளார். பெரியவர்களைப் போல் சிறு குழந்தைகள் மனக்கலக்கத்தின் காரணமாகவோ அல்லது பசியின் காரணமாகவோ தங்கள் இயல்பை மாற்றக் கூடும். உறங்கி விழித்த பின்னர் சில குழந்தைகள் அமைதியாக இருக்கக் கூடும். சில குழந்தைகளோ உறங்கி விழித்தவுடன் சிணுங்கிச் சிணுங்கி அழ ஆரம்பித்துப் பால் குடித்த பின்னர் தங்கள் அழுகையை நிறுத்தும். பசிக்காக அழுகும் குழந்தையைத் தூக்கி வைத்துக் கொண்டாலும் அது அழுகையை நிறுத்துவதில்லை. சில சமயங்களில் ஓரிரு நிமிடங்கள் அழுகையை நிறுத்தி விட்டு மீண்டும் அழ ஆரம்பித்து விடுகின்றன. இது ஒரு மிகவும் முக்கியமான நிகழ்ச்சி. ஏனெனில் சில தாய்மார்கள் குழந்தை அழும் போதெல்லாம் தாய்ப்பால் குடிக்கச் செய்கின்றனர். ஆனால் சில குழந்தைகளைத் தன் தாய் தன்னைத் தூக்கி வைத்துக் கொண்டு அன்பும் அணைப்பும் தருவாள் என்று எண்ணிக் கொண்டு அழுகின்றன.

பிறந்தவுடன் சில குழந்தைகள் தாய்களின் மார்பிடத்திற்குத் கொண்டு செல்லும்போது அழ ஆரம்பிக்கின்றன. இந்நிகழ்ச்சி குழந்தை பிறந்தது முதல் 10 நாட்கள் வரை இருக்கும். பசி இருந்த போதிலும் குழந்தை ஒருரிரு நிமிடங்கள் தாய்ப்பாலைச் சப்பிக் குடித்து விட்டு நிறுத்திவிடும். அல்லது சில சமயங்களில் தாயின் மார்பைத் தன் உதடுகளால் தொட்டு விட்டு பிறகு உதட்டை விலக்கிக் கொண்டு சிணுங்கக் கூடும். கட்டாயப்படுத்திக் தாய் குழந்தைகளைப் பால் குடிக்கச் செய்வது நல்லது அல்ல. குழந்தைக்கு இவ்வாறு தாய்பால் கொடுக்கும்போது குழந்தையின் மூக்கு மேல்

உதடுகளால் அடையபடுகின்றது. இது குழந்தையின் உடல் நலத்திற்குத் தீங்கு விளைவிக்கும் என்பதைத் தவிர அஞ்சுவதற்கு இடம் இல்லை. குழந்தையை அன்புடன் அணைத்துப் பாதுகாப்புத் தர வேண்டுமே தவிர வற்புறுத்திப் பால் புகட்டக் கூடாது.

பிறந்த குழந்தை அதிகமாக அழுவதைப் பற்றி பேராசிரியர் மெகபர்சிங் ஆராய்ந்துள்ளார். பெரும்பாலான குழந்தைகள் பகலில் நன்கு தூங்கி விட்டு இரவில் தூங்காது விழித்துக் கொண்டு தொந்தரவு செய்யக்கூடும். தாயின் கருப்பையின்கண் இருந்த குழவி பிறந்த பிறகும் இச்செய்கையைத் தொடர்ந்து செய்கிறது என்பதே இதற்குப் பொருள். இக்குழந்தைகள் தொந்தரவு காரணமாய் அழக்கூடும். சிறுநீர் கழிப்பதற்குமுன்பும் சிறுநீர்ப்பையில் ஒருவித தீ நாற்றம் அடிப்பதாலும் மிகவும் கெட்டியான மலம் கழிப்பதாலும் சிறுநீரும் மலமும் படுக்கையில் கழிப்பதாலும் குழந்தை அழக்கூடும். ஆயின் அழுகையை எப்படி நிறுத்துவது? பால் கொடுப்பதாலோ, குழந்தையின் இடுப்பு ஆடையை மாற்றுவதாலோ அல்லது குழந்தையைத் தாலாட்டினாலோ அழுகையை நிறுத்த முடிவதில்லை. நல்ல அனுபவமுள்ள தாய்மார்கள் இதன் காரணத்தை அறியக்கூடும். பெரும்பாலும் வயிற்று வலி காரணமாய் அழலாம். குழந்தைகளைக் குப்புறப் படுக்க வைப்பதால் வயிற்றிலுள்ள வாயு குடலிருந்து அகற்றப்படும் குழந்தை அழுகையை நிறுத்திவிடக் கூடும். அழுகைக்கு இன்னொரு முக்கிய காரணம் காது வலியாகும். இதனை எளிதில் கண்டுபிடித்துவிடலாம். காதுவலியுடன், காய்ச்சலும் சளியும் ஏற்படும்போது அழும்போது தக்க மருத்துவரை நடவேண்டும்.

சில குழந்தைகள் இருளைக் கண்டு அஞ்சி அழக்கூடும். இக்குழந்தைகள் வெளிச்சம் நீங்கி இருள் ஏற்பட்டதும் அழ ஆரம்பிக்கும். குழந்தையைத் தூக்கி வைத்துக் கொண்டிருக்கும்போது தனக்கு வேண்டிய அன்பும் ஆதரவும் உண்டு என நினைத்துக் கொண்டு அழுகையை நிறுத்தி விடுகின்றன. பிறந்த குழந்தையைத் தூக்கிவைத்துக் கொண்டு இருந்தால் அது அழுகையை நிறுத்தி விடுகின்றது. சில தாய்கள் வயிற்றில் காற்று இருப்பதாலும் தாய்ப்பால் பற்றாக்குறையாலும் அழுகின்றன என நினைத்துக் கொள்கின்றனர். கூறப்போனால் தாயிடம்அன்பின்காரணமாய் ஒட்டிக் கொள்கின்றன.

சில குழந்தைகள் தங்கள் தாய்மார்கள் பிறரது குழந்தையைத் தூக்கி வைத்துக் கொண்டு அன்பு காட்டினால் பொறாமையின் காரணமாய் அழத்தொடங்குகின்றன. இது ஒரு வகை.

சில குழந்தைகள் மாலை 5 அல்லது 6 மணி வரை நன்கு இருக்கும். பிறகு இரவு 9, 10 மணிவரை தொடர்ந்து அழக்கூடும். இப்பழக்கம் குழந்தை பிறந்த 3 மாதங்கள் வரை இருக்கும். இது ஒரு வியாதியன்று. இதற்த வயிற்று வலி என்று கூறுவர். இந்த மாலை நேர வயிற்று வலி குழந்தை வளர வளரச் சரியாகி விடுகின்றது. சில சமயம் இது மாதிரியான மாலை வயிற்று வலித் திரும்பவும் ஏற்படலாம்.எப்படியாயினும் குழந்தை பிறந்த 6 மாதத்தில் இந்த வயிற்று வலி தானாகவே நின்று விடுகிறது. இந்த மூன்று மாத வயிற்று வலிக்குச் சரியான காரணம் தெரியவில்லை. சில குழந்தை மருத்துவ அறிஞர்கள் குடலில் (வயிற்றில் அல்ல) வாயு இருப்பதே, இந்த 3 மாத வயிற்றுவலிக்குக் காரணம் என்று கருதுகின்றனர்.

சில குழந்தைகள் அலுப்பின் (Boredom) கராணமாய் அழக்கூடும். பொம்மை, இன்பமான சுற்றுப்புறச் சூழ்நிலை ஆகியன இருந்தால் இவை அழ மாட்டா. களைப்படைந்தமையான் அழுதால், சில நேரம் அழுதுவிட்டுத் தாமாகவே அழுகையை நிறுத்தி விடுகின்றன. குளிர்காலத்தில் குளிரைப் போக்க அதிக உடைகள் அணிவதாலும் அல்லது போதிய உடைகள் அணியாததாலும் சில குழந்தைகள் அழக்கூடும்-

சில குழந்தைகள் திடீரென ஒலி எழுவதைக் கேட்டாலும் அல்லது ஒளி, முகத்தில் படுவதாலும், ஆடையினைக் கழற்றும்போதும், குளிப்பாட்டும் போதும், 5அல்லது 6 மாதத்தில் குழந்தைகள் புதிய முகத்தினைக் கண்டாலும், பலத்தகுரலுடன் புதிய மனிதர்கள் பேசும் பொழுதும், பொம்மை தன் கைக்கு எட்டாத தூரத்தில் இருந்தாலும், விளையாட்டுப் பொருள் சிறியதாக இருந்து அதனால் கையில் பிடிக்க முடியாவிட்டாலும், நின்று கொண்டு உட்காரவோ நிற்கவோ முடியாவிட்டாலும், பிறர் உதவியின்றி எதையும் தானாகச்

செய்ய முடியாவிட்டாலோ குழந்தைகள் அழ ஆரம்பிக்கின்றன. எனவே தாய்மார்கள் ஏன் குழந்தைகள் அழுகின்றன என ஆராய்ந்து நன்கு தெரிந்து கொள்ள வேண்டும். இதற்குப் பொறுமையே தேவை. தாய் குழந்தை அழும் போதெல்லாம் தூக்கி வைத்துக் கொண்டு அன்பும் அரவணைப்பும் காட்டவேண்டும்.

நீண்ட நேரம் குழந்தையை அழவிட்டு வேடிக்கை பார்ப்பதால் இந்தக் குழந்தைகளுக்குபின்னர் ஒருவித மனோவியாதி(HYSTERIA) உண்டாகின்றது என்று பேராசியர் இல்லிங் வொர்த் கூறுகின்றார்.

# ஆண்மக்கட் பெயர்கள் - ஓர் ஆய்வு

(சென்ற இதழ்த் தொடர்ச்சி ......)

அ. நடராசன், B. Sc., M.A., M. Phil.,

### 3. சமயப் பெயர்கள் :

பெயர்களைக் கண்ட மாத்திரத்திலேயே இப்பெயர்கள் எவ்வகைப் பெயர்கள் என்பதை ஒருவாறு ஊகித்து விடமுடியும். மரபுப் பெயர்கள், குலப்பெயர்களாகிவிட்டன. தெய்வப் பெயர்களும் குலப்பெயர்களாகிவிட்டன. தெய்வப் பெயர்களில் சமயச் சார்பு தெளிவாகத் தெரியும் வாய்ப்புக்கள் உண்டு தங்கள் இஷ்ட தெய்வங்களின் பெயர்களை மக்களுக்குச் சூட்டினர். இப்பெயர்கள் அம்மக்கள் சார்ந்துள்ள சமயத்தைத் தெளிவுபடுத்துகின்றன. இச்சமயப் பெயர்களில், இந்து, கிறித்துவம், இசுலாமியம் ஆகிய சமயங்களின் பெயர்கள் காணப்படுகின்றன.

### 3.1 இந்து சமயப் பெயர்கள் :

இந்து சமயத்தின் பெயர்கள் பெரும்பான்மையுந் தெய்வப் பெயர்களைக் கொண்டே காணப்படுதலை உணரமுடிகிறது. இப்பெயர்களிலும் சைவசமயப் பெயர்கள், சமண சமயப் பெயர்கள் எனப் பிரித்துக் காணுதல் முடியும்.

எ-டு: ஈஸ்வரன்
நடராசன்
முருகன்
சிதம்பரம்

போன்ற பெயர்கள் சைவ சமயத்தைச் சேர்ந்த பெயர்களகும்.

வைணவ மதத்தினர் தம் நெறி பற்றிப் பெயரிடுவர் என்பதை

எ-டு: பெருமாள்
திருமால்
சீநிவாசன்
திருமலை

போன்ற பெயர்களைக் கொண்டு அறியலாம். இவர்கள் நெற்றியில் திருமண் இடக் கூடியவர்கள். இருப்பினும் கடவுள் நம்பிக்கை என்பது மக்களுக்குப் பொதுவானதாகையால் பெயர்களையும் மாறி வைக்-கின்றனர். ஆனால் சைவர்கள் வைணவப்பெயர்களைச் சூடுவது-போல, வைணவர்கள் சைவ சமயக் கடவுளர் பெயர்களைப் பெரிதும் சூட்ட மாட்டார்கள்.

### 3.2 கிறித்துவப் பெயர்களும் இசுலாமியப் பெயர்களும்:

கிறித்துவ சமயத்தினரின் பெயர்களும், இசுலாமிய சமயத்தினரின் பெயர்களும் இந்துப் பெயர்களில் இருந்து வேறுபாடாக இருப்பதை நாம் காணலாம். பொதுவாக கத்தோலிக்கர்கள் இயேசுதாஸ், மேரி போன்ற கடவுள் பெயர்களைச் சூட்டும் பழக்கமுடையவர்கள். ஆனால் பிராட்டஸ்டண்டுகள் யூதர்கள் பெயர்களையே சூட்டுவார்கள். இறைவன் என மதிக்கும் ஏசு பெயரைச் சூட்டமாட்டார்கள். கிறித்துவ சமயத்திலும் குடும்பப் பெயர்கள் அதிகமாகக் காணப்படுகின்றன. மேலும் இந்துக்களைப் போலவே தாத்தா பெயர், பாட்டி பெயர் என்று அவர்கள் பெயரை வைக்கும் பழக்கம் காணப்படுகிறது. பெயரைப் பார்த்த மாத்திரத்திலேயே இப் பெயரை உடையவர் கத்தோலிக்கரா, பிராட்டஸ்டண்ட்டா என்று கூறிவிடலாம்.

இசுலாமிய சமயத்தினரும் தங்களின் இறைத்தூதரென மதிக்கும் நபியின் பெயரையும், தங்களுக்குப் பிடித்தமான தலைவர்கள், வீரர்-கள், மன்னர்கள் பெயரையும் சூட்டுகின்ற பழக்கத்தைக் கொண்டுள்-ளனர்.

எ-டு: முகமது பாட்சா
சிக்கந்தர் பாட்சா
ரஹ்மத்
ஷாஜஹான்
சுல்தான் அலாவுதீன்

முகமதியர்களும் இந்துக்களைப், போல் தாத்தா, பாட்டன், பாட்டி, பெயர்களைச் சூட்டும் பழக்கத்தைக் கொண்டுள்ளனர்.

இந்து சமயத்தில் இருந்து இம்மதங்களுக்கு மாறுவோர் தங்கள் பழைய பெயரோடு கிறித்துவ அல்லது முகமதிய சமயத்தின் ஏதேனும் ஒரு பெயரையும் சூடிக்கொள்கின்றனர்.

எ-டு:

இராசேந்திரன் > மரிய ராசேந்திரன்
செல்வம் > செல்வக்கனி

4 பட்டப் பெயர்கள் (Nick Names):*

பெயர்கள் மனிதனைத் தனியே இனம் பிரித்து ஒவ்வொருவரிடம் இருந்தும் தனித்துக் காட்டவே தோன்றியுள்ளன. ஆனாலும் மக்களின் பெயர்களுடன் அவர்களுக்குப் பட்டப் பெயர்கள் சூட்டும் பழக்கம் மனிதர்களிடம் காணப்படுகிறது. பட்டப் பெயர்கள் கிராமப்புறங்களில் பெருமளவு உபயோகப்படுத்தப் படுகின்றன. "பொதுவாக, கிராமங்களில் அத்தனை பேருக்கும் ஒரு நான்கைந்து பெயர்களையே திரும்பத் திரும்ப வைக்கவேண்டிய நிலை ஏற்படுகிறது. இந்தச் சூழலில் அவர்களை வேறுபடுத்திக் காட்ட இன்னொரு பெயர் வேண்டிக் கிடக்கிறது அது அவர்களின் தோற்றத்தின் மூலமோ செயல்களின் மூலமோ அன்பு மேலிட்டோ மற்றவர்களால் நிரந்தரமாக்கப்படுகிறது. இந்நிலையில் பட்டப் பெயர்கள் உற்பத்தியாக ஒரு வழி கிடைக்கிறது'' என்று டாக்டர் மு. இராமசுவாமி, பட்டப் பெயர்கள் தோன்றுவதற்குரிய வழிமுறை பற்றிக் குறிப்பிடுகின்றார்.

பட்டப் பெயர்கள் உடலின் தோற்றம், செயல், பண்பு, செய்யும் தொழில், இடம் காரணமாகத் தோன்றுகின்றன எனலாம். மேலும் விளையாட்டு, கேலி, அன்பு, மரியாதை போன்ற காரணங்களாலும் பட்டப் பெயர்கள் சூட்டப்படுகின்றன.

தோற்றம் காரணமாக, உடல் பருத்துக் காணப்படும் மனிதன் 'குண்டன்' என்றும் 'குண்டுமணி' என்றும் அழைக்கப்படுகிறான்.

---

* சென்னைப் பல்கலைக் கழக ஆங்கில-தமிழ் அகராதியின்படி Nick name என்ற ஆங்கிலச் சொல்லுக்கு 'செல்லப் பெயர்' என்பது பொருளாகும்.

ஒல்லியாக இருக்கும் ஒருவன் 'ஒல்லிப்பாட்சா' என அழைக்கப்படுகிறான்; உயரமாக இருப்பவன் 'நெட்டையன்'; குட்டையாக இருப்பவன் 'குட்டையன்'; முடிசெம்பட்டை உடையவனுக்குச் 'செம்பட்டையன்' போன்ற பட்டப் பெயர்கள் சூட்டப்பட்டுள்ளன. நடக்கும் பொழுது ஓடுபவன்போல் நடக்கும் பாண்டி 'டொக்கு டொக்கு' என அழைக்கப்படுகிறான் ஒல்லியாக, நோயாளிபோல இருப்பதால் கல்லான் 'நோஞ்சான்' எனப்படுகிறான்.

ஒன்றுமே அவனிடம் இருந்து தெரிந்து கொள்ள முடியாது. எதையுமே அவன் பொருட்படுத்த மாட்டான். அவனுக்குக் 'கல்லுளி மங்கன்' என்ற பட்டப் பெயர் உண்டு. இது அவனின் செயல் காரணமாகச் சூட்டப்பட்ட பெயர் ஆகும். பெண்போலப் பேசுபவனையும், பெண்போல நடப்பவனையும் 'பொண்டுகசட்டி' என்ற பட்டப்பெயரால் அழைக்கின்றனர். வீட்டில் சண்டை போட்டுக் கொண்டு எலிமருந்தைக் குடித்துத் தற்கொலைக்கு முயன்று தோற்ற சுகுமாரன் 'எலிமருந்து' என அழைக்கப்படுகிறான்.

குணத்தின் காரணமாகப் பட்டப் பெயர்கள் தோன்றியுள்ளன. கருப்பன் சரியான மூர்க்கன் அப்பா! எதையும் யோசனை செய்யாது முரட்டுத்தனமாகச் செய்யும் கருப்பனுக்கு 'மூர்க்கன்', 'மோட்டா' என்ற பட்டப் பெயர்கள் சூட்டப்பட்டுள்ளன. வாய்ப்பேச்சில் அழகாகப் பேசிச் சமயம் வாய்க்கும்போது காலை வாரி விடுபவனுக்கு, 'நல்லபாம்பு' என்ற பட்டப் பெயர் கொடுக்கப்பட்டுள்ளது. தந்திரத்தால் பிழைப்பவர்களைச் 'சகுனி', 'கூனி' என்றும், புத்திக் கூர்மையுடையவனைச் 'சாணக்கியன்' என்றும் அழைக்கின்றனர். இப்பெயர்கள் அனைத்தும் மனிதனின் பண்புகாரணமாக வைக்கப்பட்ட பெயர்கள் ஆகும். எதுவுமே தெரியாத, விபரமில்லாதவன் 'மண்ணாங்கட்டி' எனப்படுகிறான். ஒருவருக்கும் அடங்காத மனோகரனுக்கு 'மொட்டுக்கட்டை' என்பது பட்டப்பெயர்.

கேசியர் வேலை செய்து வரும் இராசேந்திரன் என்பவரைக் 'கேசியர்' என்றே அழைக்கின்றனர். நாட்டாமை வேலை செய்த 'வேலுச்சாமி', 'துரை' என்ற இருவரும் 'நாட்டாண்மை' என்றே அழைக்கப்படுகின்றனர். மேலும் இவர்களைத் தனியே இனம் பிரித்துக்காட்ட 'பழைய நாட்டாமை', 'புது நாட்டாமை' என்றும் அழைக்கப்படுகின்றனர். பால் வியாபாரம் செய்த அய்யப்பனுக்கும்,

முத்தையாவிற்கும் 'பால்காரர்' என்பதே பட்டப் பெயர் ஆகிவிட்டது. பலசரக்குக் கடை வைத்திருக்கும் கருப்பையாவைக் 'கடைக்காரர்' என்றாலே அனைவருக்கும் தெரியும். பலசரக்குக் கடை மாணிக்கம் வேளாளர் சரக்கைச் செட்டியார்போலக் கொடுப்பார். எனவே அவருக்குச் 'செட்டியார்' என்ற பட்டப் பெயர் வைக்கப்பட்டுள்ளது. இப்பட்டப் பெயர்கள் மரியாதை காரணமாகவும் தொழில் காரணமாகவும் ஏற்பட்டுள்ளன எனலாம்.

மேலும் 'ரங்கூன்' சென்று வந்த காரணத்தால் கருப்பையா என்பவர் 'ரங்கோன்காரர்' என்ற பட்டப்பெயரைப் பெற்றுள்ளார். பங்காளிகளுடன் பங்கு பிரிக்கும்போது வீட்டின் மாடிப் பகுதி இராக்கப்பன் என்பவருக்குக் கிடைத்தது. அன்றுமுதல் அவர் 'மேல்வீட்டுக்காரர்' என்ற பட்டப் பெயரைப் பெற்றார். கேரளாவில் சிறுவயது முதல் வசித்துவிட்டு இப்பொழுது பூவந்தியில் உள்ள பழனிச்சாமிக்கு 'மலைக்காரர்' என்பது பட்டப்பெயராகும். ஒரு காலத்தில் சுடுகாட்டில் காவல் காத்துவந்தனர், ஒரு குடும்பத்தினர். அவர்களின் வாரிசுகள் 'கட்டவெட்டி' என்ற பட்டப் பெயரால் அழைக்கப்பட்டனர் எ-டு: கட்டவெட்டி என்ற வீரணன் அம்பலம். இவர்கள் பங்காளிக்கு 'வெட்டியான்' என்பது பட்டப் பெயர். புளியங்குளத்துக்காரர் பூவந்தியில் வசித்துவருகிறார். அவர் 'புளியங்குளத்தார்' என அழைக்கப்படுகிறார். பூஞ்சுத்தியைச் சேர்ந்த பொன்னன் பூவந்தியில் வசிப்பதால் அவருக்குப் "பூஞ்சுத்தியார்" என்பது பட்டப்பெயர். பெண்களுக்கும் இதுபோன்ற பெயர்கள் வைக்கப்பட்டுள்ளன. ஏனாதியில் இருந்து பூவந்தியில் திருமணம் செய்து கொடுக்கப்பட்ட பெண் 'ஏனாதியா' என்றும், வடக்கூரிலிருந்தும், மதுரையிலிருந்தும் வந்த பெண்கள் முறையே 'வடக்கூளு', 'மதுரையா', என்ற பட்டப்பெயர்களைப் பெற்றுள்ளனர். இப்பெயர்களனைத்தும் இருப்பிடம் காரணமாகத் தோன்றிய பட்டப்பெயர்கள் ஆகும்.

நம் நாட்டுப் பெண்கள் மாமனார், மாமியார், கணவன் பெயர்களைச் சொல்லமாட்டார்கள். ஆனாலும் தங்கள் குழந்தைகளுக்குத் தாத்தா, பாட்டி பெயர்களை வைக்கும் பழக்கம் உடையவர்கள். எனவே பட்டப்பெயர்கள் தோன்றுகின்றன.

இப்பட்டப் பெயர்கள் வைக்கப்படும் பழக்கம் சிறுவயது முதல் எல்லா மனிதர்களிடமும் காணப்படுகிறது. இங்கே கூறப்பட்டுள்ள பெயர்கள் வெகு சிலவேயாகும். பட்டப் பெயர்கள் பற்றி தனி

ஆய்வு செய்யும் அளவிற்குச் செய்திகள் கிடைக்கும். திட்டுவதற்குப் பயன்படுத்தப்படுவதற்கும் பட்டப்பெயர்கள் ஏராளமாகக் காணப்படுகின்றன. பெண்களுக்குரிய பட்டப்பெயர்களும் உண்டு. ஆனால் ஆண்மக்கட்பெயர் பற்றிய ஆய்வு என்பதால் ஆண்கள் தொடர்பான பட்டப்பெயர்களே இங்குக் கொடுக்கப்பட்டுள்ளது.

5. மறைந்து வரும் பெயர்கள் :-

பெயர்கள் வைக்கும் முறைகளும், பெயர்களும் காலத்திற்குக் காலம் மாறி வருகின்றன எனலாம். முதன் முதலில் தெய்வங்களின் பெயர்களையும், மரபுப் பெயர்களையும் மக்கள் சூட்டியுள்ளனர். எடுத்துக்காட்டாகத் தொல்காப்பியர் காலத்தில் சாத்தன், சாத்தி, பூதன் போன்ற பெயர்கள் வழக்கில் இருந்திருக்கின்றன. பிற்காலத்தில் அதுபோன்ற பெயர்கள் காணப்படவில்லை. இலக்கியப் பெயர்களும், புலவர்களின் பெயர்களும், மன்னர்களின் பெயர்களும் சூட்டப்பட்டன. பின்னர் அவைகளும் சிறிது சிறிதாக மறைந்து வருவதைக் காண முடிகிறது. தெய்வப் பெயர்களும் நாகரீகப் பெயர்களும் ஒன்றிணைந்தும் பெயர்கள் காணப்படுகின்றன.

எ-டு:- வீரணன் என்ற பாரதி
சின்னயன் என்ற கார்த்திக்

பட்டப் பெயர்களும், தெய்வப் பெயர்களும் ஒன்று சேர்ந்தும் பெயர்கள் காணப்படுகின்றன.

எ டு:- கட்டவெட்டி என்ற வீரணன்
வெட்டியான் என்ற பெருமாள்
கட்டவெட்டி என்ற சின்னையன்

இப்பெயர்கள் அனைத்தும் இப்பொழுது மறைந்து வருகின்றன

தமிழகத்தில் அரசியல் ஈடுபாடு காரணமாகவும், தனித்தமிழ் இயக்கத்தின் காரணமாகவும் பழைய பெயர்கள் மறைந்து புதிய பெயர்கள் தோன்றியுள்ளன. பழைய பெயர்களை விட்டு விட்டு,

காந்தி
நேரு
அண்ணாதுரை
விவேகானந்தன்
பாரதி
இளமாறன்
செங்குட்டுவன்

போன்ற பெயர்களை மக்கள் சூட்ட ஆரம்பித்துள்ளனர்.

திரைப்படங்கள் காரணமாகவும் பழைய பெயர்கள் மறைந்து புதிய பெயர்கள் தோன்றுகின்றன.

எனவே, தெய்வப் பெயர்கள், மரபுப் பெயர்கள் போன்ற பழைய பெயர்கள் மறைந்து வருகின்றன.

**6. பெயர்களின் தாக்கங்கள் :**

பெயர்களின் தாக்கங்கள் (Influences) அக்காலந்தொட்டு இன்றுவரை இருந்து வருகின்றன. ஒருவரைப் போல, அவரது பெயரைப் போலத் தங்கள் பிள்ளைகளுக்கும் பெயர் அமைய வேண்டும் என மக்கள் நினைக்கும்போது அம்மனிதனின் பெயர்த் தாக்கம் ஏற்படுகிறது எனலாம். இது ஒருவகையான பாதிப்பு ஆகும். இப்பாதிப்பு, சமயம், வீரம், மரபு, ஒழுக்கம், அரசியல், திரைப்படம் போன்ற வகைகளில் ஏற்படுகின்றன. சமயங்களைப் பரப்புவதற்காக எழுதப்பட்ட, புராணங்களிலும், இதிகாசங்களிலும், காப்பியங்களிலும் வருகின்ற சிறந்த ஒழுக்கமுடைய மாந்தர்களின் பெயர்களை வைத்துக் கொள்வதை மக்கள் பெரிதும் விரும்பியுள்ளனர்.

எடுத்துக்காட்டாக இராமாயணம் மக்கள் மத்தியில் பெரிதும் பாதித்துள்ளமை நன்கு தெரிகிறது. இக்காப்பியத்தில் வருகின்ற மாந்தர்களின் பெயர்கள் மக்களுக்கு இன்றுவரை வழிவழியாக வைக்கப்பட்டு வருவதை அறியலாம்.

இராமன்
இலக்குவன்
பரதன்
சீதை
ஜானகி

போன்ற பெயர்கள் மக்களிடையே இன்றும் காணப்படுகின்றன. ஆனால் இராவணன், இந்திரசித்துப் போன்ற பெயர்கள் காணப்படவில்லை. காரணம் இலக்கியத்தில் இவர்கள் நல்லொழுக்கம் உடையவர்களாகக் காட்டப்படவில்லை. எனவே இவர்களை மக்கள் வெறுத்தனர். இவைகளைக் கொண்டு பார்க்கும்போது மக்கள், நல்லொழுக்கத்தைப் பின்பற்றியவர்களின் பெயர்களைத் தங்கள் குழந்தைகளுக்குச் சூட்டி வந்துள்ளனர் என்பது தெளிவாகிறது.

இதைப் போலவே வீரம் உடையவர்களின் பெயர்களும் மக்களிடம் காணப்படுகின்றன. எடுத்துக்காட்டாக அருச்சுனன், தர்மன், சகாதேவன் போன்ற பெயர்கள் மக்களுக்கு வைக்கப்பட்டுள்ளன. மன்னர்களின் பெயர்களும் காணப்படுகின்றன.

எடுத்துக்காட்டு: நெடுஞ்செழியன்
நெடுமாறன்
செங்குட்டுவன்
இராஜராஜன்
இராஜேந்திரன்

மேலும்,

இளங்கோ
அம்பிகாபதி
கம்பன்
புகழேந்தி

போன்ற புலவர்களின் பெயர்களும் மக்களிடையே உண்டு.

இப்பெயர்கள் அனைத்தும், புராண, இதிகாச, மரபு, இலக்கியத் தாக்கங்களினால் ஏற்பட்டுள்ளன என்று கூற முடியும்.

## 6.1. அரசியல் தாக்கத்தினால் ஏற்பட்ட பெயர்கள்:-

இலக்கியத் தாக்கத்தாலும், இதிகாச, புராணங்களின் தாக்கத்தாலும், தமிழ்ப்புலவர்கள், மன்னர்கள், கதைமாந்தர்கள் பெயர்கள் மக்களிடையே இருந்தன என்பது பற்றிக் கண்டோம். அதுபோலவே இக்காலத்தில், பெயர்கள் அரசியல் தாக்கத்தின் காரணமாகச் சூட்டப்படுகின்றன என்பது பற்றியும் கீழே விளக்கப்படுகிறது.

நம் இந்திய நாட்டின் விடுதலைக்காகப் போராடிய தலைவர்கள் மக்கள் மத்தியில் செல்வாக்கும் நம்பிக்கையும் பெற்றுள்ளனர் என்பதில் சிறிதளவேனும் ஐயமிருப்பதாகத் தெரியவில்லை. எனவே தங்கள் பிள்ளைகளும், காந்தியைப் போல, நேருவைப் போல, பட்டேலைப் போல, சிதம்பரனாரைப் போல, நேதாஜியைப் போல, முத்துராமலிங்கத்தேவரைப் போல, பெரிய தலைவர்களாகவும், தன்னலமில்லாத நாட்டுப்பற்றுடையவர்களாகவும் சிறந்து விளங்க வேண்டும் என்று மக்கள் விரும்பினர். அவற்றின் தாக்கம் பெயரிடுவதிலும் ஏற்பட்டது. எனவே மக்கள் தங்கள் குழந்தைகளுக்கு

காந்தி
நேரு
பட்டேல்
சிதம்பரம்
நேதாஜி
முத்துராமலிங்கம்

போன்ற பெயர்களைச் சூட்டி உள்ளனர்.

அரசியல் துறைத் தாக்கத்தின் காரணமாக அரசியல் தலைவர்களின் பெயர்களைச்சூட்டியுள்ளமையும் தெரிகிறது. காங்கிரஸ் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் நேரு, காமராஜ், சத்தியமூர்த்தி போன்ற தலைவர்களின் பெயர்களைத் தங்கள் பிள்ளைகளுக்குச் சூட்டியுள்ளனர்.

தமிழகத்தில் தனித்தமிழ் இயக்கத்தைத் தோற்றுவித்தவர்களின் காலத்தில் பெயர்கள் தனித்தமிழ்ப் பெயர்களாக இருந்தன.

(எ.டு) கரிகால் பெருவளத்தான்

திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் தங்கள் குழந்தைகளுக்குத் தங்கள் இயக்கத்தின் தலைவர்களின் பெயர்களைச் சூட்டியுள்ளனர். அண்ணாதுரை, கருணாநிதி, அன்பழகன், மதியழகன், மாறன், நெடுமாறன் போன்ற பெயர்களை வைத்துள்ளனர்.

கம்யூனிஸ்ட் இயக்கத்தைச் சேர்ந்த தோழர்கள் ஜீவா, காரல்-மார்க்ஸ், லெனின், வாலண்டினா, நிருபன்சக்ரவர்த்தி, ஜோதிபாசு, கலியாணசுந்தரம், தங்கமணி போன்ற பெயர்களைச் சூட்டி அழைக்-கின்றனர்.

பார்வர்ட் பிளாக் கட்சியை சேர்ந்த மக்கள் தங்கள் குழந்தை-களுக்கு நேதாஜி, முத்துராமலிங்கம் என்ற பெயர்களை வைத்-துள்ளனர். முக்குலத்து இனமக்களும் தலைவர் முத்துராமலிங்கத் தேவரின் தாக்கத்தின் காரணமாக முத்துராமலிங்கம் என்ற பெயரைச் சூட்டியுள்ளனர்.

அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள். இராமச்சந்திரன், சத்தியா போன்ற பெயர்களை வைத்துள்ளனர்.

இதுபோன்ற பெயர்கள் அரசியல் தாக்கத்தினாலும், மக்கள் தங்கள் இயக்கத் தலைவர்களின் மேல் வைத்துள்ள அன்பின், பற்றின் தாக்கத்தினாலும் அமைந்து வெளிப்படுகின்றன. இதன் காரணமாகப் பழங்காலப் பெயர்கள் மறைந்து தாக்கத்தினால் புதிய பெயர்கள் தோன்றி வருகின்றன என்பதை அறியலாம்.

...... தொடரும்

# புதுமைப் பொருளிலக்கணம்

நெல்லை நா. சொக்கலிங்கம் எம்.ஏ., ஏ.எம்.ஏ.,
தமிழ் விரிவுரையாளர்,
மதுரை காமராசர் பல்கலைக் கழகம்.

## நோக்கம்

எழுத்து, சொல், பொருள் என முப்பிரிவாகத் தொல்காப்பியத்துள் கூறப் பெற்ற தமிழ் இலக்கணம் பிற்காலத்தில் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என ஐந்தாகிப் பெருகி வளர்ந்தது. 19-ஆம் நூற்றாண்டின் இறுதியிலே இவ்வைந்து பிரிவுடன் புலமை இலக்கணம் என்ற ஒன்றும் சேர, ஆறு பிரிவாகத் தமிழ் செழித்து வளர்ந்தது. அதற்குக் காரணமாகிய தமிழறிஞர் நெல்லையிலே பிறந்த தண்டபாணி அடிகள். அவருடைய 'அறுவகை இலக்கணம்' 1893-ஆம் ஆண்டில் முதற்பதிப்பாக வெளிவந்தது. முன்னைய ஐந்து இலக்கணத்துடன் ஆறாவதாக இணைக்கப்பட்டுள்ள பொருளிலக்கணம் மொழியின் ஒருபுதிய வளர்ச்சிநிலை எனலாம். புதுமையான இப் பொருளிலக்கணம் முன்னோர் வழியினின்றும் சற்று மாறுபட்டுள்ளது. அகப்பொருளைப் பொறுத்தவரை எவ்வெவ் வகையில் அப்புதுநெறி மாறுபட்டுச் செல்கிறது என்பதனைக் காண்பதே இக்கட்டுரையின் நோக்கம்.

## பொருளிலக்கணப் பகுப்பு

அறுவகை இலக்கண நூலின் மூன்றாவது பிரிவு பொருளிலக்கணம் ஆகும். தொல்காப்பியருடைய பொருளதிகாரம் பின்வருமாறு பாகுபடுத்தப்பட்டுள்ளது :

தொல்காப்பியப் பொருளதிகாரம்

(ஒன்பது இயல்கள்)

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
|---|---|---|---|---|---|---|---|---|
| அகத்திணையியல் | புறத்திணையியல் | களவியல் | கற்பியல் | பொருளியல் | மெய்ப்பாட்டியல் | உவமவியல் | செய்யுளியல் | மரபியல் |

இப்பகுப்பினின்றும் மாறுபட்ட நெறியில் அமைந்துள்ள அறுவகை இலக்கணப் பொருளிலக்கணப் பகுப்பு வருமாறு :

அறுவகை இலக்கணப் பொருளிலக்கணம்

(122 நூற்பாக்களே)

| அகப்பொருள் (51) | | | | புறப்பொருள் (55) | | | அகப் பொருள் (21) (உட்பிரிவு இல்லை) | |
|---|---|---|---|---|---|---|---|---|
| உறுப்பியல்பு | குறிப்பியல்பு | பழமையியல்பு | துறையியல்பு | நிலத்தியல்பு | ஊழியியல்பு | வேற்றுமையியல்பு | கருவியியல்பு | தொகுப்பியல்பு |
| (18) | (12) | (12) | (9) | (12) | (11) | (15) | (10) | (7) |

**பொருளிலக்கணப் பொதுஇலக்கணம்**

பொருளிலக்கணம் பற்றிய பொது இலக்கணத்தை, அடிகள் முதல் ஐந்து நூற்பாக்களில் கூறுகின்றார்.

> ''அகப்பொருள் புறப்பொருள் அகப்புறப் பொருளென
> முப்பொருள் கூறுதும் முறைப்படி உணர்ந்தே''
>
> (அறுவகை. பொருள். 2)

இறையனார் அகப்பொருள் உரையில், ''இனி நூல் நுதலியதூஉம் உரைக்கற்பாலது, அது பாயிரத்துள்ளே உரைத்தாம்; தமிழ் நுதலிற்று என்பது. தமிழ் நான்கு வகைப்படும், எழுத்தும் சொல்லும் பொருளும் யாப்பும் என'' (இறையனார் அகப்பொருள், கழக வெளியீடு, பக். 14, 1969) வருவது இவண் அறியத்தக்க-தாகும். இதனை நன்குணர்ந்த அடிகள்,

> ''பூவில் மணமெனப் புனிதத் தமிழினுக்கு
> ஆவி யாகும் அகப்பொரு ளியல்பே''
>
> (அறுவகை. பொருள். 4)

என்கின்றார். தமிழுக்குப் 'புனிதம்' என்று அடைகொடுத்து உயர்வு கொடுத்துள்ளமை சிறப்பாகும். பூ என்றால் மணமிருக்க வேண்டும். மணம் இல்லா மலரை யார் விரும்புவார்? மணமுள்ள மலரையோ யாவரும் விரும்புவர். அதுபோன்று தமிழும் விரும்புமாறுள்ளது

என்பது அடிகளின் கருத்து. அத்தகைய தமிழுக்கு உயிராக விளங்கு-வது அகப்பொருள் ஆகும் எனக் கூறும் கருத்து எண்ணி மகிழத்-தக்கதாகும். இனி அகப்பொருள் என்னும் உட்பகுப்பிலே கூறப்-பெறும் பொருளிலக்கணக் கருத்துக்களைச் சிறிது காண்போம்.

உறுப்பியல்பு

இதன்கண் முடிதொட்டு அடிவரையுள்ள மகளிரின் உறுப்பு நலன்களை முறையாகப் பேசுகின்றார். வார் குழலின் வடிவினை முதற்கண்ணும், அடுத்ததாக மகளிர் நெற்றியில் அணிந்து கொள்-ளும் நெற்றிச்சுட்டி, நெற்றிப்பட்டம், திலகம் முதலியன குறித்தும் கூறப்படுகிறது. நெற்றியின் அமைப்பைக்கூட கீழ்க்காணும் இந்-நூற்பா விளக்குகிறது.

"அகலமும் கவிழ்பிறை அன்ன தோற்றமும்
இயல்பின வாகி யியங்குறு மன்றே"

(அறுவகை. பொருள். 7)

பருவ நங்கையர்தம் புருவம் போர்வில்லைப் போன்று தோன்றும். ஆயினும் சிலபொழுது அப்புருவங்கள் வளைந்து மாறும் தன்மை பொருந்தி மறைந்துவிடும் என்கிறார் அடிகள். நேரிழையார் கண்-களின் நீட்சி, கருமை, மருட்சி, அகலம், வரிச்சீர் இவை யாவும் இயற்கையாய் அமைவன. அணியிழையின் இயல்பான நிலையில் விளங்குகின்ற வாயினது தன்மையைக் கூறிய அடிகள், அதே நூற்பாவில் ஊடற்கண் அது எவ்வாறு விளங்கும் என்பதனையும் கூறுகின்றார்.

"அணியிழை செந்நிறத்து ஆம்பல் மலர்வாய்க்கு
இதழ்ச்சுவை சொல்லிசை வெண்ணகை நிரைநயம்
இயற்கை ஊடலில் இகழ்ந்தழல் ஏனைய"

(அறுவகை. பொருள். 11)

என்பதே அந்நூற்பா. அணியிழையின் கன்னம் ஒளியுடையது. அது இயற்கைத் தன்மையாகும். கமழ்ச்சி, முகக்குறி காட்டல், மஞ்சள் தன்மை இவை கணவனால் வருவிப்பனவாம். மென்மையான குரல்தான் இயற்கை; மற்றெல்லாம் செயற்கை எனச் செப்புகின்றார். பெண்டிர் தம் மார்பின் தன்மைகளைக் கூறிய பின்னர், அழகிய நங்கையினது அங்கை அழகினைக் கூறவந்த அடிகளார்,

''மலர்தலும் குவிதலும் செம்மையும் மயிலனாள்
அங்கைக் குணமே; அணிவளை அம்மனை
கழங்கவை ஒவ்வொரு காலத் துறுபவே''
(அறுவகை. பொருள்.17)

என்கிறார். பெண்டிர்தம் வயிற்றின் அழகினைக் கூறவந்த அடிகளார் அது தொய்வாகவே இருக்கும் என்றும், கருவுற்ற காலத்து வயிற்றின் குணம் விம்மும் என்றும் கூறுகின்றார். அன்னமென நடக்கும் நடையே இயற்கை நடையாகும். சிலம்பும் பிறவும் அணிவது செயற்கைச் செயலாகும். இவை கற்புடைப் பாவையர் அடிக்குக் கூறும் இலக்கணமாகும்.

''அன்னமென் நடையே அகற்றரு மியற்கை
சிலம்பொலி யாதிய சேர்க்கைச் செயலாம்
பழிக்கரும் கற்புடைப் பாவைய ரடிக்கே''
(அறுவகை. பொருள்.21)

எனவரும் நூற்பாவின்கண்,

''அனிச்சமும் அன்னத்தின் தூவியும் மாதர்
அடிக்கு நெருஞ்சிப் பழம்'' (திருக். 1120)

என்னும் குறளின் சாயல் பதிந்து விளங்கக் காண்கின்றோம்.

**குறிப்பியல்பு**

இவ்வியல்பு 12 நூற்பாக்களைக் கொண்டு விளங்குகின்றது. இதன்கண் ஆசிரியர் தண்டபாணிஅடிகள் எழுவகைப் பருவ மங்கையர்தம் இயல்புகளையும் கணவனைச் சேரும் பெண்ணின் தோற்றம், அவளுடைய செயல்கள் ஆகியன குறித்தும் கூறுகின்றார்.

பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண் ஆகிய எழுபருவத்து மங்கையர்தம் வயதுவரம்பினைக் கூறி, அவர்தம் உள்ளத்து இயல்புகளையும் எடுத்துரைக்கின்றார் அடிகள். ஏழாண்டு நிரம்பிய பெண் பேதை எனப்படுவாள்; அவளுக்கு நாணம் சிறிதுறும். ஒன்பதாண்டுப் பெண்ணாகிய பெதும்பைக்கு உள்ளத்தில் காதல் சற்று அரும்பும்; அச்சம், நாணம், மடம் வந்து பொருந்தும். மங்கைப் பருவத்தாளோ பன்னிரண்டு அகவை

யாள். அவள் தக்கதொரு காதலனை விரும்பிக் கலவிமுயக்கத்திற்கு எண்ணம் கொள்வாளாம்.

"பன்னிரண் டாண்டுடை மங்கைபந் தடிக்கும்
ஒத்தபாங் கியரோடு ஊச லாடும்
நீர்த்தடங் குளிக்கும் நினைந்து நெட் டுயிர்க்கும்
எழில் பொலிதரும் இணைமுலை காக்கும்
காமவேள் அனையான் கலவிக் கிசையுமே"

(அறுவகை. பொருள். 26)

தண்டபாணிஅடிகளின் எழுபருவத்து நங்கையர்தம் வயதுவரம் போடு இலக்கண விளக்கப் பாட்டியல் கூறும் பாகுபாட்டுடன் ஒப்பிடுவது ஒரு சிறப்பாகும்.

| பருவம் | இலக்கண விளக்கம் | அறுவகைஇலக்கணம் |
|---|---|---|
| பேதை | 5 முதல் 7 ஆண்டு | 7 ஆண்டு |
| பெதும்பை | 8 முதல் 12 ஆண்டு | 9 ஆண்டு |
| மங்கை | 13 ஆண்டு | 12 ஆண்டு |
| மடந்தை | 14 முதல் 19 ஆண்டு | 16 ஆண்டு |
| அரிவை | 25 ஆண்டு | 19 ஆண்டு |
| தெரிவை | 26 முதல் 32 ஆண்டு | 24 ஆண்டு |
| பேரிளம்பெண் | 40 ஆண்டு | வயது குறிப்பிடவில்லை. |

முன்னைய பாட்டியல் நூலாசிரியர்கள் இவ்வயது வரம்பு கூறும் நிலையில் வேறுபடுவர். அதுபோன்றே தண்டபாணி அடிகளிடமும் அம் மாறுபாட்டினைக் காண முடிகின்றது. கண்ணொடு கண்ணிணை ஒத்தல் காமக் குறிப்பின் தோற்றுவாய். தண்டபாணி அடிகள் குறிப்பியல்பு என்னும் பகுதியில் பார்வை,பரிவு, பழகுதல், செயல்கள் இவற்றின் வாயிலாக ஒரு நங்கையின் உள்ளக் காதலின் குறிப்பு வெளிப்படும் என்பார்.

"பார்வையிற் பரிவிற் பழகலிற் பகர்ச்சியில்
செயலிற் சேயினழ சிந்தையிற் கிடக்கும்
மோகம் கமழ்வது முறையெனத் தருமே"

(அறுவகை. பொருள். 29

என்பது அந்நூற்பா. தலைவனிடத்தில் தன் உள்ளத்தைப் பறிகொடுத்த பெண் உணவை வெறுப்பதும், திங்களைத் திட்டுவதும், பெருமூச்செறிவதும் இயல்பாகும். தென்றலுக்கு அஞ்சுவாள்; எதையோ பறிகொடுத்தவள் போல் விளங்குவாள். அவளின் தாயோ ஒன்றும் புலப்படாது வருந்துவாள். தாயை அழஅழப் படுத்துவாள். இந்நிலையில் தலைவி,

''ஒருநாள் எழுநாள்போற் செல்லும்சேட் சென்றார்
வருநாள்வைத்து ஏங்கு பவர்க்கு'' (1262)

என்ற குறள் தலைவியின் ஏக்கம் இவண் ஒப்பிட்டுக் காணத்தக்கது.

கனவிலே காதலன் வருவான்; கண்விழித்து அயர்வாள்; மறதியினால் கலன்களை மறப்பாள்; இவை மையலுற்ற மங்கையின்பால் நிகழ்வனவாகும். காளையினுடைய தோளைப் புணரும் குறிப்பினைப் பற்றி அடுத்த நூற்பாவில் எடுத்துரைக்கின்றார்.

''மாலைகண் டுவப்பதும் மருப்புனல் ஆடலும்
சேலையும் பணிகளும் திலகமொடு மையும்
திருத்தலும் தூ ரியச் செங்கைச் சேடியர்
எழுத்தினுக் கிசைவதும் இனையன பிறவும்
காளைதோட் புணரும் கருத்தினள் குறிப்பே''
(அறுவகை. பொருள். 31)

கலவிக்கண் நிகழும் உள்ளக் குறிப்புக்களை அடுத்துவரும் மூன்று நூற்பாக்களில் குறிப்பிடுகின்றார்.

**பழமையியல்பு**

இப்பகுதியின்கண் ஆணும் பெண்ணும் ஒருமனப்பட்டுக் கூடும் நிலையினையும், அவர்தம் அன்பின் உயர்வினையும் எடுத்துக் கூறுகின்றார்.

நேராகவே தலைவனும் தலைவியும் குறிப்பினாலும் வாய்மொழியாலும் இணக்கம் அறிதல் உண்டு. அன்றியும் தூது மூலமாகவும் இசைவு பெறல் உண்டு. இவற்றைப் பழமையியல்பு என்பர் புலவர். இவ்வுலகில் ஆண், பெண் எனத் தனித்தனி உருவங்கள்

பெற்றிருந்தும், அவர்கள் மனம் விழைந்து முயன்றாலும் இணை-யாமலேயே இருவர்தம் நிலையும் முட்டுப்பட்டு விடுகின்றது. அவ்-வாறு இணையமுடியாமல் உயிரிழந்து அறிந்தோர் பற்பலர் ஆவார். சங்க இலக்கியத்தில் கண்களால் காமநோய் விளைந்தது என்பர்.

''கண்தர வந்த காம ஒள்ளெரி'' (குறுந். 305)

என்பது சங்கப் பாடல் தொடர். கண்களின் பரிமாற்றத்தினால் இணங்காத பெண்ணைக் கைகளால் இணங்க வைத்தல் இயலாது என்பதனை இலக்கணப் படுத்திக் கீழ்வரும் நூற்பாவில் காட்டு-கின்றார்!

''கண்களால் இசையாக் காரிகை கரத்தால்
இணங்காள் என்றமை இயம்புமிவ் வுலகே''
(அறுவகை. பொருள். 38)

மேற்கண்ட நூற்பாவில்,

''கண்ணொடு கண்ணினை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள்
என்ன பயனு மில'' திருக். (1, 100)

என்ற குறளின் சாயலைக் காணமுடிகின்றதன்றோ?

பொருட் பெண்டிர் பொய்மை முயக்கம் இருட்டறையிலே ஏதிலாப் பிணத்தைத் தழுவியதற்குச் சமம் ஆகும் என்பது வள்ளுவர் கருத்து. இக்கருத்தினையே ஆசிரியர்,

''ஏதொரு நிமித்தத் தேனும் எட்டுணை
உரிமையும் இல்லார் உடல்தழீஇ மகிழ்வார்
பதரினும் பதரெனப் பகர்வது முறையே''
(அறுவகை. பொருள். 39)

என்கிறார். பதரினும் பதர் என்று மிகக் கடுமையாகச் சாடுவது இவண் எண்ணத்தகுவதாகும்.

புலவிக் காலத்துக், கிழவோன் பணிதலும் உண்டு. இதனை,

''மனைவி உயர்வுங் கிழவோன் பணிவும்
நினையுங் காலை புலவியுள் உரிய''
(தொல். பொருளியல். 31)

என்பர் தொல்காப்பியர். இக்கருத்தினைத் தண்டபாணி அடிகள்,

"பொய்யினும் தீராப் புலவியின் மிகையால்
வைதெவன் செய்யினும் மடநல் லார்இரு
பாடகத் தாள்களிற் பாழியந் தடந்தோட்
காளைபோய்ப் பணிதலும் கழிக்கரு மியல்பே"

(அறுவகை. பொருள். 41)

என நூற்பா நடையில் நுவலுகின்றார். பெண் என்றால் பேயும் இரங்கும் என்பது பழமொழி. இதனையே அடிகள் வேறுவகையில் பெண்மைக்கு அலகையும் பெரிதும் உள்ளம் இரங்கும்! என்று எடுத்துரைக்கின்றார். கற்பினின்றும் வழுவாத பெண்டிர்முன் முனிவரும் கூடச் செல்ல இயலாது. அத்தகைய ஆற்றல் கற்பின் திண்மைக்கு உண்டு என்பது அடிகளின் கொள்கை இதனை வலியுறுத்துவதே,

"பிழையா தொழுகிய பெண்மகட் கெதிர்செலும்
முனிவரும் தெய்வமும் இலையெனல் முறையே"

(அறுவகை, பொருள். 46)

என்ற நூற்பா ஆகும். 'தெய்வமும் இலை' என்பதற்குச் சான்றாக ஆரனுர் உற்ற கண்ணகிக்கு முன்னாலே மதுராபதித் தெய்வம் கூடச் செல்ல அஞ்சி, அவளுக்குப் பின்னாலே பக்கவாட்டிலே சென்று பேசினமை இவண் எண்ணத் தகுவதாகும்.

"ஒரு முலை குறைத்த திருமா பத்தினி
அலமரு திருமுகத் தாயிழை நங்கைதன்
முன்னிலை ஈயாள் பின்னிலைத் தோன்றிக்
கேட்டிசின் வாழி நங்கையென் குறையென
வாட்டியே திருமுகம் வலவயிற் கோட்டி
யாரைநீ என்பின் வருவோய்"

(சிலப். கட்டுரை. 14-19)

எனவரும் கண்ணகியின் உரையினால் இதனை உணர முடிகின்றது.

## துறையியல்பு

அறுவகை இலக்கணம் கூறும் அகப்பொருள் இலக்கணத்தின் இறுதிப்பகுதி 'துறையியல்பு' ஆகும். இதன்கண் 9 நூற்பாக்கள் அமைந்துள. அகப்பொருள் துறைகள் சிலவற்றை அடிகள் இதன் கண் கூறிச் செல்கின்றார். அகத்தில் நிகழும் ஒவ்வொரு இன்ப நிகழ்ச்சிகளும் ஒவ்வொரு துறைகளாகும் என்பது அடிகளின் கொள்கை.

காண்டல், ஐயுறல், மெய்தொட்டுப் பயிறல், கலவி மகிழ்தல் என நானூறு துறைகளை வகுத்துக் கூறுவர் புலவோர். ஆனால் நானூறு துறைகள் இவை இவை என விரிவாகவும் விளக்கமாகவும் கூறவில்லை. அம்மட்டோ?

கடலன்ன காமம் உழந்தாலும் மடல் ஏறுவது பெண்மைக்குப் பொருந்தாது. ஆயின் தன்னைத் தலைவியாக வைத்துப் பாடும் திருமங்கை ஆழ்வார் தம்முடைய பெரிய திருமடலில் மடல் ஏறு-வதாகவே கூறுகின்றார். அவ்வண்ணம் கூறுவது வடமொழி மரபாகும்.

''அன்ன நடையார் அலர்ஏச ஆடவர் மேல்
மன்னும் மடல்ஊரார் என்பதோர் வாசகமும்
தென்னுரையிற் கேட்டறிவது உண்டு — அதனை யாம்தெளியேம்
மன்னும் வடநெறியே வேண்டினோம்''

(நாலாயிர. பெரியதிரு. 39-40)

என்பதே அஃது இதனைத் தண்டபாணி அடிகள்,

''..................அன்றியும் ஒருவன்
பெண்மடலேறிய பெற்றிகூறினனே''

(அறுவகை. பொருள். 49)

என்று கூறுகின்றார். கோவை நூல்களில் துறைகள் நானூறு துறை-களாக வகுக்கப்பெறும். ஆயினும் நூறு முதல் ஆயிரம் வரையிலும் கூடத் துறைப்பொருள் கூறப்படும் என்பது தண்டபாணி அடிகளின் கருத்துரை.

''துறைத்தொகை ஒருவிதம் செல்வார் சொல்லினும்
நூறு தொட் டாயிரம் வரைநுவன் றதன்பெயர்
வேறுஇடத் தகுமென விளப்பல் என்னிசைவு''

(அறுவகை. பொருள். 51)

இதனுடன்,

''ஆய்ந்த கலித்துறைதான் நானூறு அகப்பொருண் மேல்
வாய்ந்த நற்கோவையாம்''

(வெண்பாப் பாட்டியல். 15)

என்ற இலக்கண நெறியை ஒப்பிட்டுக் காணுதல் வேண்டும். ஒரு துறையை வைத்துக் கோவை நூல்கள் பாடுதலும் உண்டு. 'நாணிக் கண் புதைத்தல்' என்ற ஒரு துறையை மையமாக வைத்து நானூறு பாடல்கள் பாடும் மரபு வழக்கில் உள்ளது. இதனையும் துறையியல் பினும் ஆசிரியர் வண்ணச்சரபம் தண்டபாணி அடிகள்,

''ஒருதுறை பற்றிப் பற்பல விதமாய்ச்
சாற்றலும் இயல்பெனிற் றள்ளார் புலவோர்''

(அறுவகை. பொருள். 55)

என எடுத்துரைக்கின்றார்.

இவ்வாறு அடிகள் அகப்பொருளைத் தொல்காப்பியர் மரபி- லிருந்து சற்று மாறுபட்ட முறையில் அகத்துணர்வுகளை எடுத்- துரைக்கின்ர். இஃது இன்னும் ஆராய்ந்து ஒப்பிட்டு உணர்தற்கு உரிய வகையில் அமைந்துள்ளது எனலாம்.

# தமிழ் நாட்டின் தொழில் வளம்

பழனி. அரங்கசாமி

மதுரைப் பல்கலைக் கழகம்

நற்றமிழ் நாட்டு மக்கள் நானிலம் புகழ மேனிலை எய்தி வாழ்ந்த மேம்பாட்டைப் பறைசாற்றுகின்ற பண்டை இலக்கியமே சங்கத்தமிழ் நூல்களாம். பண்டைத்தமிழ் நாகரிகம் புதை பொருளால் நிறுவப்படாவிட்டாலும் இந்தப் பொன்னேடுகளால் நிறுவப்படும் சீர்மை பாராட்டத்தக்கது. அத்தோடு அப்பழம் பெரும் இலக்கியங்கள் அன்றைத் தமிழ்மக்களின் நாகரிக வாழ்வினையும் காட்டுகின்ற காலக் கண்ணாடிகளாம். அந்த இலக்கியக் கண்ணாடியிலே பட்டுத் தெறிக்கின்ற ஒளி வெள்ளத்தில் உழவும் தொழிலும் பெற்ற மாண்பினை இற்றைக்கால உண்மையுடன் ஒத்துக் காண்போம்.

நாட்டின் வாழ்விற்கும் மக்கள் முன்னேற்றத்திற்கும் அடிப்படை உழவு என்ற பேருண்மையினைப் பண்டைத்தமிழர் உணர்ந்திருந்தனர்.

> ''சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம்; அதனால்
> உழந்தும் உழவே தலை''

என்ற குறள் இதனை வலியுறுத்தும். மண் இருந்தும் அதனை வளப்படுத்திப் பயனுறத் தெரியாதவர் இருப்பின் அவர் திறமையற்றவர் என்பது மட்டுமல்ல; சோம்பேறிகளும் ஆவர். உழுபணி செய்யாது வறுமையுறுகின்ற அவர் தம் பேதைமையை நிலமகள் என்னும் நல்லாள் தன்னுள்ளே எண்ணி நகுவாள் என்பது மற்றொரு குறள்.

> ''இலம் என்று அசை இ இருப்பாரைக் காணின்
> நிலம் என்னும் நல்லாள் நகும்''

ஆற்றுநீரும் ஊற்றுநீரும் வான்மழையும் வற்றாத பொய்கைகளும் அற்றைநாள் வயல்களை வளப்படுத்தின. உழவின் உயர்விற்குக் கால்நடைகளே ஆதாரம் என்று கருதிய பழந்தமிழர் கால்நடையைச் செல்வம் என்று கருதினார்கள், மண்ணிலே போட்ட விதைகள் கொட்டுகின்ற மழையினால் விண்ணையும் அளாவி வளர்ந்து, நெல்லும்

தினையுமாய், வரகும் கம்புமாய்த், தம்மை வாழ்விக்கக் கண்டுணர்ந்த மக்கள் அவற்றைப் பகுத்துண்டு வாழும் பண்புடையோராய் விளங்கினார்கள்.

'பகடு நடந்த கூழ் பல்லாரோடுண்க' என்ற அறிவுரைக்கு அடிபணிந்தார்கள் சமூகத்தின் ஆணிவேராய் விளங்கிய அந்த வேளாண் பெருங்குடி மக்களுக்குக் கரை இகந்து வரி விதித்த கிள்ளி வளவனை வெள்ளைக்குடி நாகனார் கண்டித்த உண்மையினால் மேழிச் செல்வர்கள் அற்றைக் காலத்தில் அடைந்திருந்த மேதகு நிலை நமக்குப் புலனாகின்றது.

''மாரி பொய்ப்பினும் வாரி குன்றினும்
இயற்கையல்லன செயற்கையிற் றோன்றினும்
காவலர்ப் பழிக்கும் இக் கண்ணகன் ஞாலம்
அதுநற்கு அறிந்தனை யாயின் நீயும்
நொதுமலாளர் பொதுமொழி கொள்ளாது
பகடுபுறந் தருநர் பாரம் ஓம்பிக்
குடிபுறந் தருகுவையாயின் நின்
அடிபுறந் தருகுவர் அடங்கா தோரே''

இற்றை நாட்களிலும் இந்தியாவின் முக்கியமான பெரிய தொழில் உழவு. தமிழகத்தின் 90 லட்சம் ஏக்கருக்கு மேலான நிலப்பரப்பிற்கு 27, 000 ஏரி குளங்களாலும், 6,000 கால்வாய்களாலும் பற்பல அணைக்கட்டுகளாலும் பாசன வசதி செய்யப்படுகிறது. பெருகி வரும் மக்கட் தொகையின் உணவுத் தேவைகளை நிரப்பதற்கு வேண்டிய முயற்சிகள் அனைத்தும் விரிவான முறையில் செய்யப்படுகின்றன. அத்தோடு 1841-இல் மைக்கேல் பாரடேயால் கண்டுபிடிக்கப்பட்ட மின்சக்தியின் பயனை தமிழகத்தின் அணைக்கட்டுகள் மூலமாக நாம் இன்று அனுபவித்துக் கொண்டிருக்கிறோம். தமிழகத்தின் ஐந்து சிமிட்டித் தொழிற்சாலைகளும், இருபதுக்கு மேற்பட்ட தொழிற்பேட்டைகளும் நாடெங்கணும் இயங்குதற்கு மின் வசதியே துணையாக உள்ளது. அதியமான் என்ற தமிழ்ப் பெரு மன்னனின் காலத்திற்கு முன்னரே கரும்பு இந்நாட்டிற்கு வந்ததென்று புறநானூறு கூறுகிறது.

ஆனால் அந்தத் தீங்கரும்பின் சாற்றிலிருந்து சர்க்கரை எடுக்கின்ற இற்றைத் தமிழ்நாட்டில் பதினைந்துக்கு மேற்பட்ட ஆலைகளும் மின்சக்தியின் துணை கொண்டு இயங்கித்தொழில் வளம் பெருக்கு-கின்றன.

உண்ண உணவும் உடுக்க உடையும் மக்களுக்கு இன்றி-யமையாத் தேவைகளாகும். ஆடைநெசவில் தமிழகம் உயர்ந்திருந்த உண்மையினைப் பண்டை இலக்கியத்தால் அறிகிறோம். பட்டினும், மயிரினும், பருத்தி நூலினும் அற்றைத் தமிழர் ஆடை நெய்யக் கற்றிருந்தனர். மக்களின் உடைத் தேவையினை நிறைவு செய்யும் பெரும்பணியில் இன்று தமிழகத்தில் நூற்றைம்பதுக்கு மேற்பட்ட நூற்பாலைகள் இயங்கிக் கொண்டு இருக்கின்றன. கையாலேயே யாவற்றையும் நெய்துகொண்டிருந்த நிலைமாறி நூற்றுக்கணக்கான ஆலைகளில் ஆயிரக்கணக்கான நூற்புக் கதிர்கள் இரவு பகலாக நூல் நூற்றும், துணிகள் நெய்தும் விந்தை புரிகின்ற உண்மையினை நாம் இன்று காண்கிறோம். இத்தகு நூற்பாலைப் பெருக்கத்தால் கைத்தறிகள் நசித்து விடுமோ என்ற ஐயம் அடிக்கடி எழுகின்றது. அதனாற்றான் மாநில அரசினர் ஆண்டுக்கு ஒரு முறை பண்டிகை காலங்களையொட்டி கைத்தறித் துணி விற்பனையில் ரூபாய்க்குப் பத்து அல்லது பதினைந்து காசுகளைத் தள்ளுபடி செய்து விற்றுக் கைத்தறிக்கு ஊக்கம் அளிக்கின்றனர். சாதாரண ஏழை மக்களும் உடுத்தும் புடவை, வேட்டி, துண்டு போன்றவற்றைக் கைத்தறிகளே நெய்ய வேண்டும் என்ற சட்டம் கொணர்ந்து நிரந்தரமாகக் கைத்தறித் தொழிலினை அரசினர் காப்பாற்ற வேண்டும்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் தமிழன் கண்ட கலாச்-சாரத்தில் பொற்கொல்லரும் தச்சரும் கலஞ்செய் கம்மியரும் மலிந்-திருந்தனர். நீலத்திரைக் கடலில் மிகப் பெரிய கலங்கள் காற்றின் வேகத்தினால் நீரைப் பிளந்து சென்ற காட்சி ஒன்றை அகநா-னூற்றுப் புலவன் குறிப்பிடுகின்றான்:

''உலகு கிளர்ந்தன்ன உருகெழு வங்கம்
புலவுத் திரைப் பெருங்கடல் நீரிடைப் போழ
இரவும் எல்லையும் அசைவின்று ஆகி
விரைசெலல் இயற்கை வங்கூழ் ஆட்டக்

கோடுயர் திணிமணல் அகன்துறை நீகான்
மாட ஒள்ளெரி மருங்கு அறிந்து ஒய்ய''

— அகநானூறு

நீரிலே செல்ல ஓடங்களும், மரக்கலங்களும், நிலத்திலே செல்லுதற்கு வண்டிகளும் தேர்களும் அக்காலத்தே செய்யப்பட்டன. இத்தகு தொழில் திறம் படைத்த தச்சர்கள் அற்றைக் காலத்தே இருந்த உண்மை 'எண்டேர் செய்யும் தச்சன்' என்ற புறநானூற்றுப் பகுதியால் அறியக் கிடக்கின்றது. புனைமணியிலும் பொன் நகையிலும், பட்டுப் புடவையிலும் மயங்கிக் கிடப்பது இற்றைக் கால மகளிர்க்கும் இயல்பேயன்றோ! இத்துறையில் அன்னோர்தம் விழைவையெல்லாம் அக்காலத்துக்கைத்தொழில் வினைஞர்கள் நிறைவேற்றினர். யானைத் தந்தத்தால் செய்து முத்துக் குஞ்சங்களால் அலங்கரிக்கப்பட்ட கட்டிலைப்பற்றிய விளக்கம் நெடுநல் வாடையில் காணப்படுதல் கொண்டு பண்டைத் தமிழர் தம் இன்பியல் வாழ்க்கையேயன்றி, அவர்களின் கைத்தொழில் வன்மையும் புலனாகின்றது. இவ்வண்ணம் கலம்வனைக் குயவரும், பொலம்வினைக் கொல்லரும், கல்வினைத் தச்சரும், கஞ்சகாரரும், கன்னித் தமிழகத்தின் உயிரோட்டமான தொழில் வளத்திற்கு ஊன்றுகோலாய் நின்றனர். மேலும் மதுரை, காஞ்சி, கரூர் போன்ற பெருநகரங்களின் விண்ணுயர நின்ற கோட்டை மதில்களில், வில்லும் பொறியும், கல்லுமிழ் கவணும், காய்பொன் உலையும், கல்லிடு கூடையும், கோலும் குந்தமும், வேலும் பிறவும் பொருந்தியிருந்த உண்மை கொண்டு இரும்புத் தொழிலும் ஏற்றமுற்றிருந்த நிலை நமக்குத் தெரிகிறது.

அன்றைய இரும்புத் தொழில் தொடக்க நிலையில் தான் இருந்திருக்கக்கூடும். தற்காலத்திலே அத்தொழில் சிறந்த முறையில் விரிவடைந்து, பாலங்கள், கட்டிடங்கள் கட்டுதற்கும், இருப்புப் பாதை போடுதற்கும், இன்னும் ஏராளமான இயந்திரங்களுக்கும் பயன்படுகின்றன. சேலம் மாவட்டம் கஞ்சமலைப் பகுதியின் இரும்புத் தாது, நெய்வேலியின் நிலக்கரியினைக் கொண்டு இரும்பாக மாறித் தொழில் வளம் பெருக்கும் நன்னாள் இன்று வந்து விட்டது.

தீவட்டிகளும், தாவர எண்ணெயின் விளக்குகளும் நிறைந்திருந்த அன்றைய நிலையினையும், மண்ணெண்ணெ விளக்குகளும்,

மின் விளக்குகளும் மலிந்து, இரவைப் பகலாக மாற்றுகின்ற இன்றைய நிலையினையும் எண்ணிப் பார்த்தால் நாடு கண்டிருக்கும் முன்னேற்றம் நமக்குத் தெரியாமற் போகாது.

நம்மனோர் பண்டைத் தமிழ் நாட்டில் கனவு கூடக் கண்டிராத பல அரும்பெருந் தொழில்கள் இன்று பல்கிப் பெருகியிருக்கின்ற சிறப்பினைக் குறிப்பிடாமல் இருக்க முடியவில்லை. சைக்கிளும், வானொலிப் பெட்டிகளும், மினவிசிறிகளும், மின் மோட்டார்களும், ஏராளமான இன்னபிற பெரும்பொருள்களும் தொழில் வளத்தின் மாண்பினை எடுத்துக் காட்டுகின்றன. ஏற்கனவே உள்ளவையன்றி திருச்சிக்கு அருகேயுள்ள கொதிகலன் உற்பத்திச் சாலையும், சூரியூர் துப்பாக்கித் தொழிற்சாலையும், மேட்டூரின் அலுமினியத் தொழிலகமும், பெரம்பூர் ரயில் பெட்டித் தொழிற்சாலையும், நெய்வேலியின் அனல்மின் நிலையமும், ஆவடியின் 'டாங்க்' தொழிற்சாலையும் உதகையின் பிலிம் தொழிலகமும், நந்தம்பாக்கம் அறுவைக் கருவிகளின் உற்பத்திச் சாலையும் ஈண்டுக் குறிப்பிடத்தக்கவை. மக்கட் பெருக்கத்திற்கேற்பத் தொழிற் கூடங்களைப் பெருக்க வேண்டிய இக் காலத்தே தோல் பதனிடலும், அதனின்று அழகிய பல பண்டங்கள் செய்தலும் ஒரு குறிப்பிட்ட தொழிலாகவே வளர்ந்துள்ளது. திண்டுக்கல், திருச்சி போன்ற இடங்களில் பதனிடப்படும் தோல் நமது உள்நாட்டுத் தேவையினை நிறைவு செய்வதோடு வெளிநாடுகட்கும் ஏற்றுமதி செய்யப் பெறுவது நினைவிற் கொள்ளத்தக்கதாகும்.

மூச்செல்லாம் முத்தமிழாய், பேச்செல்லாம் பீடுதமிழ்க் கவிதையாய், வாழ்க்கையின் ஒவ்வொரு கோணத்திலும் சிந்தையின் உயர்வுக் கேற்பச் செந்தமிழ் இலக்கியம் படைத்த நம் முன்னோர்கள் காலத்தில் பேப்பர் இல்லை; பேனா இல்லை. ஆயினும் நாடகப் பனுவல்கள், கவிதைத் தொகுப்புகள், காவியப்பாக்கள் என்றின்ன இணையற்ற தமிழ் இலக்கியங்களை ஏடும் எழுத்தாணியும் கொண்டு படைத்துச் சிறந்தனர். இருப்பினும் சொல்லின் சுவையும் கற்பனை வளமும் காவிய நயமும் அங்கே குறைந்தபாடில்லை. மலைபோன்ற வளர்ச்சியில் மகிழ்ந்து திளைத்துக் கொண்டிருக்கும் நம்மிடையே இன்று ஏராளமான காகித ஆலைகள் விதவிதமான தாள்களைச் செய்து தள்ளுகின்றன. அப்படியிருந்தும் ஏட்டிலும் எழுத்தாணியிலும் உருவாகிய பண்டைத்தமிழ் இலக்கியத்தின் கடைக்கண் பார்வையும்,

இலக்கிய வாடையும் நமது எழுத்திலே வீச வேண்டும் என்று நாம் கருதுகிறோம் என்றால், பண்டை இலக்கியத்தின் சீர்மையும், நீர்மையும் எத்துணைச் சிறப்புடைத்து என்று எண்ணிப்பார்க்க வேண்டும்.

இயந்திர வேகத்தில் தொழில் வளம் மல்கியும், உற்பத்தி நீடித்தும் பொருள்கள் கிடைத்திலவே என்ற வருத்தமும் இந்நிலை என்று தீருமோ என்ற ஏக்கமும் இருக்கின்ற காரணத்தால் மக்களிடை மனநிறைவும் உளமகிழ்வும் இல்லை.

தொழில் வளத்தின் இன்றைய விரிவும் முதிர்ச்சியும் விளைவும் பய்னுமில்லாத பண்டைக் காலத்தே நம் நாட்டு மக்கள் இன்றைய ஏக்கமும் வருத்தமும் இன்றி அன்போடும் நிறைவோடும் அமைதி-யோடும் அருளோடும் வாழ்ந்ததைப் பண்டை இலக்கியங்கள் படம் பிடிக்கின்றன. அன்றைய உயர்வும் சிறப்பும் இன்றையத் தொழில் வளத்தோடு சேர வேண்டுமாயின், இரண்டு கடமைகளை நாம் மனத்தில் கொள்ள வேண்டும். வளருகின்ற மக்கட் தொகையினைக் கட்டுப்படுத்துகின்ற கடமையில் சமூகம் உணர்தல் வேண்டும். உற்பத்தியாகும் எந்தப் பொருளையும் முடக்கி வைத்து, அது கெட்டுப்போன பின்பு வெளிக்கொணர்ந்து கலப்படமும் செய்து, வயிற்றிலடித்துக் கொடிய விலைக்கு விற்கும் கொலைகாரத் தன்மை வணிகர்களிடமிருந்து மறைதல் வேண்டும். இப்படிச் சமூகத்தின் இரு கோணங்களிலும் ஒத்துழைப்பு இருக்குமாயின், இன்றைய சமுதாயம் தொழில் வளத்தின் முழுப்பயனையும் ஒரு சேர அனு-பவித்து மகிழ முடியும் என்பதோடு நாமும் வாழ்வோம்; நாடும் வாழும்; நலம் பல பொலியும்.

'வடுவஞ்சி வாய் மொழிந்து
தமவும் பிறவும் ஒப்ப நாடிக்
கொள்வதூஉ மிகை கொளாது
கொடுப்பதூஉங் குறைபடாது
பல்பண்டம் பகிர்ந்து வீசுங்
தொல் கொண்டித் துவன்றிருக்கை'

— பட்டினப்பாலை.

## நூல் மதிப்புரை

### மாணிக்கவாசகர்

—கோ. வன்மீகநாதன்
சாகித்திய அகாதெமி, 1983.
புதுதில்லி-பக்கம் 6 + 87. விலை ரூ. 4.

'இந்திய இலக்கியச் சிற்பிகள்' என்னும் வரிசையில் வெளிவரும் 24 ஆம் தமிழ்நூல் மாணிக்கவாசகர். சாகித்திய அகாதெமியின் திட்டப்படி இவ்வரிசை நூல்கள் முதலில் ஆங்கிலத்தில் எழுதப்பட்டுப் பிற இந்திய மொழிகளிற் மொழிபெயர்க்கப்படுவனவாகும். இத்தமிழ் நூலின் மூல வடிவத்தை அகாதெமிக்காக ஆக்கியுதவியவர் அறிஞர் திரு.கோ. வன்மீகநாதன் ஆவார். தமிழிலும் வல்ல அப்பெரியாரே தம் ஆங்கிலநூலைத் தமிழாக்கம் செய்திருப்பது மிகவும் போற்றத்தக்கது. மூலத்திற்குச் சரியான அழகிய மொழிபெயர்ப்பு இது.

சைவ சமயாசாரியர் நால்வருள் மாணிக்கவாசகர் காலம் பற்றிய விவாதங்கள் பல உண்டு. அவர் தேவாரம் பாடிய மூவர் முதலிகளுக்கும் பிற்பட்டவர் என்பதற்கு ஆய்வாளர் எடுத்துரைக்கும் சான்றுகளை எடுத்துக்காட்டித் தக்கவண்ணம் மறுத்திருக்கும் பகுதி சிந்தைக்கினிய பெருவிருந்து. மறைமலையடிகளின் கருத்தை ஒத்துக் கொண்டு கி.பி. மூன்றாம் நூற்றாண்டினர் மாணிக்கவாசகர் என்பதனைத் தக்க ஏதுக்கள் காட்டி நிறுவியுள்ளார்கள். மாணிக்கவாசகர் வரலாறுகள் காணப்பெறும் திருவிளையாடற்புராணங்கள், கடவுண்மா முனிவரின் திருவாதவூரடிகள் புராணம் ஆகியவற்றில் காணுமாறு அவர்தம் வரலாறும் விளக்கமாக இந்நூலுள் எளியநடையில் தரப்பட்டுள்ளது.

திருவாசகம்தான் மாணிக்கவாசர்; மாணிக்கவாசகர்தாம் திருவாசகம்; அதுவே அவருடைய வாழ்க்கை வரலாறு. இதனை மெய்ப்பிப்பதற்குத் திருவாசகப் பதிகங்களில் ஆழ்ந்து அவர்தம் மணிவாக்குகளைக் கண்டு தக்கமுறையில் விளக்கம் தரும் பகுதி ஆன்மாவுக்குத் திருவாசகம் கலங்கரை விளக்கம் என்னும் கருத்தை விளக்குகிறது.

மணிவாசகரின் நூல்களாகிய திருக்கோவையார், திருவாசகம் பற்றிய மதிப்பீட்டை 2 ஆம் அதிகாரத்துள் காணலாம். முகப்பு என்னும் மூன்றாம் அதிகாரத்தில் திருவாசகத்தின் அமைப்புமுறை எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. நாயக-நாயகி பாவமாக இருள்மலநிலை அருள்உறுநிலை, இன்புறுநிலை, ஐக்கியானுபூதி என்னும் விதேக-முத்தி ஆகியவற்றைத் தத்துவ விளக்கமாக அமைத்துத் தந்துள்-ளார்கள், அங்கங்கே மேனாட்டுத் தத்துவ நூலாசிரியர்களின் கருத்துக்-களையும் ஒப்புமையாகத் தந்து விளக்கியிருப்பது கருத்துக்களைத் தெள்ளத் தெளிவுற வாசகர் புரிந்துகொள்ள வாய்ப்பாக உள்ளது. மாணிக்கவாசகர் வாழ்க்கை வரலாற்றோடு அவர் வெளியிட்ட ஆன்மீக உண்மைகளையும் விளக்கும் இந்நூல் அவரைக் குறித்த ஒரு சரியான மதிப்பீட்டை உலகுக்கு நல்குகிறது.

அழகுற அச்சியற்றியிருக்கும் பாங்கும் பாராட்டத் தக்கது. அங்கங்கே காணப்படும் எழுத்துப் பிழைகள் முதலியன இனிவரும் பதிப்பில் தவிர்க்கப்படுதல் வேண்டுல். நல்லதொரு சிறப்புடைய நூல் இத்தகு சில குறைகளும் இல்லாது இலங்குதல் வேண்டும்.

**மு. சண்முகம் பிள்ளை**

---

'வான் கலந்த மாணிக்க வாசக நின் வாசகத்தை
நான் கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே
தேன் கலந்து பால் கலந்து செழுங் கனித் தீஞ்சுவை கலந்து
ஊன் கலந்து உயிர் கலந்து உவட்டாமல் இனிப்பதுவே'

—வடலூர் வள்ளலார்.

**யோகாசான முறையில் வைத்தியம்**: ஆசிரியர்; யோகி N. ராஜன் — திருச்செந்தூரன் பதிப்பகம், A. P 1347, 7ஆவது செக்டர், 33 ஆவது தெரு, கே. கே. நகர் - சென்னை —600078, விலை ரூ. 8-00. 127 பக்.

இந்நூலை இரண்டு பகுதிகளாகப் பிரிக்கலாம். நோய்களைப் பற்றி முதலாவது பகுதி உரைக்கின்றது. இரண்டாம் பகுதி விளக்கப் படங்களுடன் ஆசனங்கள் செய்யும் முறையைச் சொல்கின்றது. ஒவ்வொரு நோயைப் பற்றிய தோற்றத்தையும் விளைவையும் கூறி ஆசன முறைகளையும உணவுத் திட்டத்தையும் இந்நூல் விவரிக்கின்றது. உட்கொள்ள வேண்டிய உணவைக் குறித்தும் உணவுக் கட்டுப்பாட்டையும் ஆசிரியர் உரைக்கின்றார். ஒவ்வொரு நோயைப பொறுத்த வரையிலும் மாற்றமின்றிக் காபி, டீ, கோகோ, குடி, பொடி, புகை, புலால், முட்டை தவிர்க்கப்பட வேண்டியவை என்றும் சொல்லப்படுகிறது. 23 ஆசனங்கள் செய்யும் முறையுடன் அவற்றைச் செய்வதால் பெறும் பயனையும் ஆசிரியர் விளக்குகின்றார். எடுத்துக்காட்டாக யோக முத்திராசனம் செய்வதால் பெறும் பயன்களாவன: முதுகு எலும்பு நேராகும். நுரையீரலிலுள்ள நோய் நச்சுக் கிருமிகள் நாசமாகும். முக்கியமாக மலச்சிக்கல் நீங்கும். 'இந்நூலை 50 ஆண்டுகளாய் விஞ்ஞான முறையில் ஆராய்ச்சி செய்து அமைந்த நூல் என்றால் அது மிகையாகாது என்று ஆசிரியர் முன்னுரையில் குறிப்பிடுகின்றார். யோகாசனப் பயிற்சியில் விருப்பமுள்ளவர்க்கு இந்நூல் பயன்படக்கூடும்.

கு.சி. கமலையா

மணியம் பிரஸ், மதுரை-9.